# தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, தை 24 (6-2-'60). சனிக்கிழமை | இதழ் 34


# பதவியெனின் ஓடுகிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அகில இந்தியக் கண்ணோட்டம் படைத்தவர்கள் அனைவரும் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மதிப்பீடு செய்வதில் பத்தாண்டுகளுக்குமேல் காலத்தைக் கழித்துவிட்டனர். கழகத்தின் இலட்சியப் பணியும் கொள்கைப் பெருக்கமும் அவர்களது இதயத்திலே பெரியதொரு மருட்சியை வளர்த்திருப்பதைத்தான் துணைக்கண்டத்தின் பல்வேறுபட்ட அரசியல் நிகழ்ச்சிகள் படம் பிடித்துக்காட்டுகின்றன. முன்னேற்றக் கழகத்தின் முக்கியமும் முதன்மை பெற்றதுமான நாட்டுப் பிரிவினைக் குரலான 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இதய கீதத்தை இழிமொழிகளாலே மாற்றிவிட முனைகிறார்கள். ஏகஇந்தியப் பண்பும் பாரதத்தின் பாங்கும் பங்கப்படக்கூடாதே எனப் பயந்து சாகும் பேர்வழிகள்தான் தங்களின் செயல்முறைகளினால் தங்களைத் தாங்களே

திராவிட முன்னேற்றக் கழகம் இவர்களைத் தன்னுடைய எதிரிகளாக என்றும் கருதிக்கொண்டதில்லை. காரணம், ஆளும் வாய்ப்பினைப் பெறுகின்ற எந்த மனிதனும் மந்திரி என்ற மட்டரகமான நிலைக்கு மாறிவிடுவதினால் தாயகத்தின் விடுதலையைப் பேணுகின்ற எந்த ஒரு இயக்கமும் அவர்களின் பாராட்டுதலைப் பெற முடிவதில்லை! கடலூர் நகரத்து இராமசாமி என்பவர் காங்கிரசின் செல்வாக்கு அரண்களைத் தகர்க்கும் அரும்பணியினைச் செய்தார் 1952-ம் ஆண்டுத் தேர்தலில்! திடீரென்று அமைச்சரானவுடன் கழகத்தின் ஆதரவினைப் பெற்று தேர்தலில் வெற்றி முழக்கம் செய்ததையும், அறிஞர் அண்ணாவின் முன்னிலையில், "ஆய்வுரைகள் தரவேண்டும்; அவைகளின்படி சட்டமன்றத்தில் செயலாற்றுவேன்; கட்டளையிட்டால் கழகத்தின் பின்னே ஓடிவருவேன்" என்றெல்லாம் வாய்ச்சிலம்பம் ஆடியதையும் மறந்துவிட்டல்ல; தன் உள்ளத்

களையே விருந்தாளிகளாக்கிக்கொள்ளும் அந்தக் கட்சியும், ஏற்றுக்கொண்டுவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தை இழித்தும் பழித்தும் பேசுபவர்களுக்கு இந்த முன்னாள் மந்திரியின் கதையை நினைவூட்ட வேண்டியஅவசியம் ஏற்பட்டுள்ளது. சென்னைசர்க்காரின் இரட்டை ஒலி பெருக்கியிலே ஒன்றாக இருக்கும் நிதி

மன்றப் பண்புகளைப் பறி கொடுத்துவிட்டுப் பதவிப் பிடியை மட்டுமே நம்பியிருக்கும் அவரைப் போன்றவர்களின் அரசியல் அறிவுரைகளை நம்பித்தான் பலர் அரைகுறை ஏமாளிகளாகிவிட்டார்கள்! அண்ணாவின் அறிக்கையிலே எந்தப் பகுதியும் சரியல்ல என்று சொல்லுவதற்கு அமைச்சரவையில் எவரும் தயாராக இல்லையென்பதை அவர்களின்

## பண்பெனின் சாடுகிறார்!

யமைச்சர் டில்லி சர்க்காரில் அமைச்சர் பதவிக்கு வாய்ப்பு வரும்போதெல்லாம் முன்னேற்றக் கழகத்தைப் பற்றி தன்னுடைய அழகுத் திருவாய் மொழிகளைச் சிந்துவார்! உள்ளத்திலே உள்ள அழுக்காறு அவரது உரையாடலிலேயும் இழைந்திருக்கும்! அகில இந்தியக் காங்கிரசின் தலைவர் பதவிக்குப் பலகாலமாக ஏங்கித் தவிக்கும் அவருடைய அழகு

அமைதித் தன்மையே அறிவிக்கிறது, தமிழகத்தார் அனுதாபப்படுகின்றனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்திற்கு மதிப்பளிக்கமறந்துவிடும் மந்திரியாரைப்போலவே தமிழ்நாட்டின் காங்கிரசிற்கு தவிர்க்க முடியாத காரணங்களினாலே தலைவராகியிருக்கும் அளகேசன் தன்னுடைய அன்றாட அலுவல்களைக் கூட மறந்துவிட்டு, தமது பழைய

# வெறிநிலையில் ஆடுகிறார்!

தரம் தாழ்த்திகொண்டுள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பலகாலமாகச் சொல்லிவரும் தத்துவங்களைப் புரிந்துகொள்ளாதவர்கள், அதற்கு இணையாக வேறோர் இலட்சியத்தை உருவாக்கி வளர்க்கமுடியாதவர்கள் அந்தத் துறையில் தங்களது சிந்தனையைப் பயன்படுத்தும் பக்குவமற்றவர்கள் பழிதூற்றும் படலத்திலே பவனி வருகிறார்கள். இந்தப் பட்டியலில் ஆளுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ள அமைச்சர்களும் அவர்தம் அடிபணிவோரும் முதலிடம் பெறுகிறார்கள். இவர்கள் கொலுமண்டபம் கண்டு, கோட்டைக்குள்ளே கோலோச்சத் துவங்கிய காலத்திலிருந்து நாட்டுமக்களின் கண்ணீரைத் துடைக்கும் நல்ல காரியங்களைச் செய்யாவிட்டாலும் கழகத்தோழர்களின் கண்ணியத்தைச் சவாலுக்கு அழைக்குமளவுக்கு அதிகார மமதையுடன் பேசியிருக்கிறார்கள். கண்ணீரும் செந்நீரும் ஒன்றாகும் வகையில் அடக்குமுறைகளையும் உருவாக்கியுள்ளனர்.

திலே மறைத்து வைத்துக்கொண்டு மார்தட்டிக் கிளம்பினார்! இரண்டாவது பொதுத் தேர்தலில் கழகத்தின் அபேட்சகரிடம் அகப்பட்டுக்கொண்டு மீண்டிட முடியாமல் திண்டாடினார்! அவர் அமைச்சராக இருந்துகொண்டே போட்டியிட்டார். அவரை எதிர்த்தவர் சட்டக்கல்லூரி மாணவர் கிருட்டிணமூர்த்தி! தப்பிப் பிழைத்த இராமசாமி, காமராசரின் கடைக்கண் பார்வையிலே படாமல்– காரணம் பார்வையிலே பழுதல்ல – இவர் பழைய பக்குவம் குறைந்துவிட்டார். காங்கிரசு கட்சிக்குத் தேவையற்ற சரக்காகிவிட்டார்! கோழியை மாட்டுக்குத் தீனியாக்கிக் கொண்ட கோமான் விருதை வீரரின் விழியசைவுக்கு ஏங்கினார். அவரோ விலாவிலே வேல் சொருகுவதுபோல் விலகிப் போகச்சொன்னார்! அந்தப் பரிதாபத்துக்குரிய பழைய மந்திரிதான் தற்போது சுதந்திராக் கட்சியிலே குடிபுகுந்து உள்ளக் குமுறல்களையெல்லாம் தனித்துக்கொள்ளப் போகிறாராம்! விரட்டப்பட்டவர்

சுந்தரப் பெயர் இந்தத் தடவையும் இவருடைய நாவிலே மட்டும் நடமாடிவிட்டு நாட்டுமக்களின் கவனத்தைப் பெறாமலே ஓடிவிட்டது! ஆந்திரத்தின் முதல்வர் சஞ்சீவியார் அந்தப் பரிசினைப் பெற்றார்! ஆத்திரப்படுகின்ற அமைச்சரவர்கள் செங்கற்பட்டு இளைஞர் காங்கிரசு மாநாட்டிலே தன்னுடைய எரிச்சலை அறிஞர் அண்ணா அவர்கள்மீது காட்டினார்!

பாணியிலேயே தெருவோரத்துச் சண்டியர்களைப் போலச் சல்லடம் கட்டியிருக்கிறார்! பக்தவத்சலத்துடன் பழகிய பாதகச் செயலினாலே பொங்கல் திருநாளைப் பற்றிக்கூட பெங்களூரில் போய்ப் பேசியிருக்கிறார்! தில்லி நகரத்துப் பெரு வீதிகளிலே பேபி மந்திரியாகப் பவனி வந்தபோது தமிழை அழிக்கவும், தமிழரைத் தாழ்த்தவும், வடவர்கள்

## இருள்வலையில் கூடுகிறார்!

ஆயிரங்கோடி ரூபாய் தமிழகத்திற்குத் தேவையென்று அண்ணா கேட்டது ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதை போன்றதாகும் என்றார்! அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் திட்டத்தின் உருவத்திற்கேற்பத் தயாரித்துக் கொடுத்த அறிக்கையினை மறைத்துவிட்டு மக்கள் மன்றத்திலே தன்னுடைய வழிவகை வாய்ப்புகளற்ற தன்மையினைக் காட்டிக்கொண்டார்! பாராளு

வஞ்சக வலை விரித்து வேலைகளைச் செய்துகொண்டிருந்த காட்சியைக் கண்டபோதும்காணாதவராகத்தமிழர் தம் தன்னேரில்லாத புகழை மறந்தவராக மரக்கட்டைகளைப்போல அசையாப் பொருளாக இருந்த அவர்தான் இப்போது முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும் போக்கிலே தன்னுடைய நாக்கைச் சுழலவிட்டிருக்கிறார்!

— 9-ம் பக்கம் —

# சுரண்டும் கூட்டம் செல்லும் பாதை!

ஆலை முதலைகள் என்று சில முதலாளிகளைக் குறிப்பிடும்போது கூறப்படுகிறது. முதலாளிகள் என்றால் சிறு சிறு கம்பெனிகளின் முதலாளிகள் அல்ல; பல பெரிய கம்பெனிகளின் முதலாளிகள். ஒருவரே பல பெரிய கம்பெனிகளின் 'டைரெக்டராக' இருப்பார். எல்லாம் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் முதலைப் போட்டு, வெற்றிகரமாக நடைபெற்றுவரும் கம்பெனிகளாக இருக்கும். இப்படிப்பட்ட கம்பெனிகளின் நிர்வாகம் ஒரு குறிப்பிட்ட சில டைரெக்டர்களிடமே இருக்கும். இப்படிப்பட்ட கம்பெனிகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட துறையில் வியாபாரம் செய்யும் கம்பெனிகள் சங்கிலித் தொடர்போல் பல அமைந்துள்ளன. அவற்றின் நிர்வாகம் ஒரு சிலரின் ஆட்சியில் அகப்பட்டுள்ளது. அவர்களின் சொல்லே பங்கு மார்க்கெட்டை நிர்ணயிக்கிறது. இத்தகைய கம்பெனிகளுக்கு 'சங்கிலி' (Chain industries) என்று ஆங்கிலத்தில் பெயருண்டு. இந்தச் சங்கிலிக் கம்பெனிகளைத் தங்கள் கைவிரலில் வைத்திருப்பவர்கள்தாம் புகழ்பெற்ற டாடா, பிர்லா, டால்மியா, சாகுஜெயின், முந்திராஷராப், கஸ்தூரிபாய் லால்பாய், ஸ்ரீராம், பாரத்ராம், ஷாந்திபிரசாத் ஜெயின் முதலிய பெரும் பணக்காரர்கள். இவர்களின் சுண்டு விரல் அசைவில்தான் பங்கு மார்க்கெட்டில் விலைகள் ஏறுவதும், இறங்குவதும் அடங்கியுள்ளன.

இத்தகைய சங்கிலிக் கம்பெனிகள் அமெரிக்காவில் ஏராளமாக உள்ளன. முதலாளித்துவத்தின் சொர்க்கபூமியான அமெரிக்காவில் சில குறிப்பிட்ட முதலாளிகள் பல தொழில்களைத் தங்கள் கைக்கீழ் வைத்திருப்பதில் ஆச்சரியமில்லை. பத்திரிகைகள் முதற்கொண்டு, வங்கிகள், பெரிய கனரகத் தொழிற்சாலைகள் வரையில் இத்தகைய பெரும் பணமுதலைகளின் கையில்தான் பல அடங்கியுள்ளன. அந்நிலையை ஒட்டித்தான் இந்தியாவிலும் சங்கிலித்தொடர்போல் பல கம்பெனிகளை நிர்வகித்து வரும் நபர்கள் சிலர் வாணிபத் துறையில் ஏகபோக உரிமை அனுபவித்து வருகின்றனர். அத்தகைய குழுக்களை (Group Industries)யும், அவற்றை ஆட்டி வைப்பவர்களையும், அவைகளின் மூலதனத்தையும் கீழ்க்கண்ட கட்டுரையில் காண்போம்:

சாகுஜெயின் நிறுவனத்தார் நடத்தும் தொழிற்சாலைகள் பல உள்ளன; அவைகளில் முக்கியமான பங்குதாரர்கள் ஷாந்திபிரசாத் ஜெயின் என்பவரும், ஏ. கே. ஜெயின் என்பவரும் ஆவர். ஜெய்ப்பூர் உத்யோக் லிமிடெட் என்ற தொழிற்சாலை; இதன் மூலதனம் ரூபாய் ஐந்து கோடி. இதன் முக்கிய டைரெக்டர் ஷாந்தி பிரசாத் ஜெயின் ஆவார். இத்தொழிற்சாலையில் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்று சிமெண்ட் ஆலைகள் ஆண்டுதோறும் ஆறு இலட்சம் சிமெண்ட்டை உற்பத்தி செய்கின்றன. இதே நிறுவனத்தார் மற்றொரு சிமெண்ட் தொழிற்சாலையை அசோகா சிமெண்ட்ஸ் லிமிடெட் என்ற பெயரில் நடத்திவருகின்றனர். பிகாரில் உள்ள டால்மியா நகரில் ஒரு சிமெண்ட் உற்பத்திசாலை – நாளொன்றுக்கு 850 டன் சிமெண்ட் உற்பத்தி செய்வது – ஏற்படுத்தியிருக்கின்றனர். இதன் மூலதனம் இரண்டு கோடியே ஐம்பதுலட்சம் ரூபாயாகும். இதன் முக்கிய டைரெக்டர் ஷாந்தி பிரசாத் ஜெயின் ஆவார். இந்த நிறுவனத்தாரின் மற்றொரு தொழிற்சாலை ஆல்பியன் ப்ளைவுட் லிமிடெட் என்பதாகும். வியாபாரத்திற்கு, அழகான வேலைப்பாடுகள் நிறைந்த ப்ளைவுட்டை உற்பத்தி செய்வதே இக்கம்பெனியின் நோக்கமாகும். இதன் மூலதனம் ரூ. 25 இலட்சமாகும். இதன் முக்கிய டைரெக்டர் என். சி. ஜெயின் ஆவார். பாரத் சுரங்கங்கள் லிமிடெட் (Bharat Collieries Ltd.) என்ற கம்பெனியும் இவர்களுக்குச் சொந்தமானதே. இந்தப் பெயரில் ஐந்து சுரங்கங்கள் நடத்தி வருகின்றனர். இதன் மொத்த மூலதனம் சுமார் ரூ. 2 கோடியாகும். இதன் முக்கிய டைரெக்டர் ஏ. கே. ஜெயின் ஆவார். ஸ்ரீ கிருஷ்ணா ஞானோதே சர்க்கரை நிறுவனம் என்ற தொழிற்சாலையும் இவர்களுக்குச் சொந்தமானதே. இரண்டு சர்க்கரைத் தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 1500 டன் கரும்பை அரைத்துச் சர்க்கரையாக்கவும், நாள் ஒன்றுக்கு 1200 டன் கரும்பை அரைத்துச் சர்க்கரையாக்கவும் ஈடுபட்டுள்ளன. இதன் மூலதனம் ஒருகோடி ரூபாயாகும். இதன் முக்கிய டைரெக்டர் ஏ. கே. ஜெயின் ஆவார். ஐந்து கோடி ரூபாய் மூலதனம் கொண்டதும், இந்தக் குழுவினரால் நிர்வகிக்கப்படுவதும் ஆன மற்றொரு தொழிற்சாலை இரயில்வே சம்பந்தப்பட்டதாகும்; இதன் பெயர் டெக்ரி ரோடாஸ் லைட் இரயில்வே கம்பெனி லிமிடெட் என்பதாகும். இதன் முக்கிய டைரெக்டர் ஏ. கே. ஜெயின் என்பவராவார். இந்த நிறுவனத்தார் நிர்வகிக்கும் இதரத் தொழிற்சாலைகள், ரோடாஸ் தொழிற்சாலைகள் லிமிடெட், நியூ சென்ட்ரல் ஜூட் மில்ஸ் லிமிடெட், சாகு கெமிக்கல் ஒர்க்ஸ், ஹத்வே டிஸ்டில்லெரி, இந்துஸ்தான் வெகிக்கில்ஸ் லிமிடெட், பென்னெட் கோல்மான் கம்பெனி லிமிடெட் முதலியவையாகும். இவைகள் சணல், இராசாயன உரங்கள், தளவாடங்கள், சிறுதொழில்களுக்கு வேண்டிய கருவிகள், முதலியவைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன. இவைகள் யாவும் லட்சக்கணக்கில் மூல தனம் போட்டு நடத்தப்படுவன. சாகு ஜெயின் குழுவினரால் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகள் இவை! இது ஒரு சங்கிலியின் ஒரு வளையம்! அந்தச் சங்கிலியின் மற்றொரு வளையத்தைக் காண்போம்.

ஒரு குறிப்பிட்ட நபர் ஆட்சிப் பொறுப்பை நிர்வகிக்கும் – அதிகமான பங்குகளைத் தங்கள் கையில் வைத்திருப்பதன் மூலம் அந்தக் கம்பெனிகளை ஆட்டிவைக்கும் தொழிற்சாலைகளுக்கு உதாரணமாக மேலே குறிப்பிட்ட சாகு ஜெயின் குழுவைக் குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட நபர் – ஒரு தனி மனிதர் – பல கம்பெனிகளைத் தன் சுண்டு விரலில் வைத்திருக்கிற நிலைமையையும் இங்குக் காணலாம். அவருடைய சொல்படித்தான் பங்குகளை வாங்கவும் விற்கவும், பங்குகளின் எண்ணிக்கையை உயர்த்தவும், தனக்கு வேண்டிய நபர்களை டைரெக்டர்களாகக் கொண்டுவரவும், குறிப்பிட்ட நபர்களைத் தணிக்கையாளர்களாகக் கொண்டுவரவும், குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு அல்லது கட்சிகளுக்கு நன்கொடைகள் தரவும், இன்னோரன்ன பிற காரியங்களும் அவருடைய சொல்படிதான் நடக்கின்றன. இத்தகைய தனி மனிதர்கள் பல கம்பெனிகளை ஆட்டிப்படைக்குமளவிற்கு அந்தக் கம்பெனிகளின் பங்குகளைத் தங்கள் குடும்பத்தினரின் பெயரில் வாங்கியுள்ள தனி மனிதர்கள் இன்றைய இந்தியாவில் பலர் இருக்கின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜே. ஆர். டி. டாடா என்பவராவார். இவர் பல கம்பெனிகளில் டைரெக்டர்கள் குழுவிற்குத் தலைவராக இருக்கிறார்; அதன்மூலம் சங்கிலிபோல் பல கம்பெனிகளின் உரிமையை இவர் பெற்றிருப்பதோடு, அவற்றின் வழிகளையும் இவரே நிர்ணயிக்கிறார்.

டாடா முக்கிய டைரெக்டராக இருக்கும் கம்பெனிகளில் சிலவற்றைக் காணலாம். டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்–எண்ணெய் வித்துக்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை இது. இதன் மூலதனம் இரண்டு கோடியே ஐம்பது லட்சமாகும். அடுத்தது டாடாக் கெமிக்கல்ஸ் லிமிடெட் ரசாயன உரங்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையான இதன் மூலதனம் ரூபாய் பத்துக் கோடியாகும். டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் என்பது புகழ்பெற்ற இரும்பு எஃகு நிறுவனம் ஆகும். இதன் மூலதனம் ரூ. 27,02,50,000 ஆகும். இதன் கிளை நிறுவனங்கள், இது தொடர்பு கொண்ட தொழிற்சாலைகள் பலப்பல உள்ளன. டாடா பொறியியல் நிறுவனம் என்பது ஒன்று, பொறியியல் துறையில் பல கருவிகளையும் தயாரிக்கிறது இக்கம்பெனி. இதன் மூலதனம் பத்துக் கோடி ரூபாயாகும். டாடா தொழிற்சாலைகள் என்பதும், டாடா ஹைட்ரோ–எலெக்ட்ரிக் ஏஜென்சி என்பதும், டாடா சன்ஸ் (பி) லிமிட்டெட் என்பதும் இந்நிறுவனத்தார் நடத்தும் வேறு சில தொழிற்சாலைகளாகும். இவைகளெல்லாவற்றிற்கும் ஜே. ஆர். டி. டாடா முக்கிய டைரெக்டராக விளங்குகிறார். எல்லாம் கோடிக் கணக்கில் மூலதனம் கொண்டவை.

குழுக்கம்பெனிகளில் முக்கியமான ஒரு குழு ரோகிட் கம்பெனிகளின் (Rohit Group) குழுவாகும். அதில் சேர்ந்துள்ள கம்பெனிகள் பின்வருமாறு.

ரோடா மில்ஸ் லிமிடெட்.

சாயாஜி மில்ஸ் லிமிடெட், பரோடா.

சாயாஜி மில்ஸ் லிமிடெட், பம்பாய்.

பிபின்சில்க் மில்ஸ் லிமிடெட்.

சி. டாக்டர் அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்.

ஓரியண்டல் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட்.

காலிகோ என்கிரேவிங் ஒர்க்ஸ்.

ஆர். எம். என்ஜினியரிங் ஒர்க்ஸ், தொழில் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை.

— 11-ம் பக்கம் —

## துன்ப வாழ்க்கை

முகில்மறைத்த புதுநிலவு கருந்திரையை விலக்கி
முகமலரை நீட்டிற்று; வையமெலாம் இன்பம்
அகில்மணமும் கொடிமுல்லை பூத்தநறு மணமும்
அசைந்தாடும் தென்றலிலே நாற்றிசையும் பரவ
முகிழக்கின்ற அல்லிமலர் இதழ்விரித்துச் சிரிக்கும்
முற்ருத முன்னிரவு; நானெழுந்து நடந்தேன்
புகைபடிந்த ஓவியமாய்ப் பெண்ணொருத்தி வழியில்
பொன்னுடலை அரைகுறையாய் மறைத்தபடி நின்ருள்.

காவியத்தின் உயிரனையாள்! கவிதைமலர்க் கொத்து!
கண்களிலே நீர்மல்கத் திங்களையே பார்த்தாள்
"காவிரித்தாய் பாய்கின்ற கன்னித்தமிழ் நாட்டின்
கற்புநிலை விளக்குகிற பொற்புடைய நங்காய்!
நீயிருக்கும் நிலைகொடிதே; அதைப்போக்க இந்த
நீளாடை போர்த்திக்கொள்" என்றென்றன் துண்டை
மாவிலைக்கண் பெண்மயிலின் மலர்க்கரத்தில் ஈந்தேன்;
மங்கையவள் அழுதபடி அதையுடுத்திக் கொண்டாள்.

"மலர்முகத்தில் ஒளியின்றி வாடுகின்ற பெண்ணே!
வாழ்நாளில் நீகண்ட துயரென்ன" என்றேன்.
அலர்கின்ற மலரானேன்; மணவாளன் இன்றி
அரைக்காத சந்தனமாய்த் திகழ்கின்றேன் இன்று;
சிலநாள்முன் நெசவாளிக் கெனைமுடித்தார் பெற்ருேர்
திரைகடலின் அலைபோல அவர் சென்று மறைந்தார்
அலைபட்ட துரும்பாகத் துடிக்கின்றேன் ஐயோ
அனல்பட்ட மெழுகாகக் கரைகின்றேன் இன்றே.

உடல்மறைக்க நான்நெய்த நூலாடை என்றன்
உலைவயிற்றுப் பசிபோக்க மருந்தாகி விட்ட
கடைநிலையை எண்ணியெண்ணி மனம்வருந்து கின்றேன்
காசினியே இனியெனக்கு வேம்பென்று" முடித்தாள்.
கடல்சூழ்ந்த தமிழ்நாட்டில் நெசவாளர் துன்பம்
களைகின்ற நன்ஞளே பொன்ஞளென் றெண்ணிக்
கடைவிழியில் நீர்சிந்தி நடைபோட்டேன்; ஆனல்
கயல்விழியாள் அழுதிட்ட ஒலியடங்க வில்லை!

—துறையூர் ந. அலி பீ. ஏ.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 6 | 6-2-'60 | இதழ் 34

## குமரப்பா! நீ ஏன் தமிழனாய்ப் பிறந்தாய்?

மனிதனாய்ப் பிறத்தல் கொடிதில்லை என்ற எண்ணம் வளர்ந்து தழைக்கும் இந்த நாளிலும் தமிழனாய்ப் பிறத்தல் கொடிதென்று தான் எண்ணப்படுகிறது.

இந்தச் சிந்தனையில் தவறேதுமில்லை என்றுதான் படுகிறது, மாண்டு மடிந்த **குமரப்பாவின்** வாழ்வை நோக்கும்போது,

ஆண்டு பலவாக அவர் காந்தியாரின் பொன்னுரையைக் கேட்டார்; உணர்ந்தார்; கடைப் பிடித்தார்!

கேட்டதையும் உணர்ந்ததையும் கடைப்பிடித்ததையும் எடுத்தெடுத்துச் சொன்னார்; எழுதி எழுதிக் காட்டினார்;

தான் ஏற்ற தலைவனின் பாதைக்குத் தன் அறிவை ஒளி விளக்குகளாக்கி நிறுத்தினார்.

காந்தியாரின் பொருளியற் கொள்கைகள் அவரது ஆராய்ச்சியாலும் எழுத்துவன்மையினாலும் ஒளி பெற்றன; உரிய இடத்திற்கு மேலும் பெற்றன.

ஆனாலும் அவர் எதிர்ப்பார்த்த நேர்மையை-ஒழுங்கை இந்த ஏக பாரதக்காரர்கள் ஒழுகிக் காட்டவில்லை, விடுதலைக்குப்பின்.

இறுதி நாட்களைச் சிறகொடிந்த பறவையாய், கனவுடைந்த ஏழையாய்ச் சந்தித்திருக்கிறார்.

இறுதிப் படுக்கையிலும், "சரிந்துவிட்டனவே காந்தியாரின் கனவுகள்!" என்று சஞ்சலக் காட்டிற்குள் அவர் நுழையாமலிருந்திருந்தால் வாழ்ந்திருப்பார்;

மனச் சஞ்சலம் அவரைச் செயலற்றுக் கிடத்திவிட்டது.

'காந்தியார் இறந்து ஆண்டுகள் பன்னிரண்டு ஆகிவிட்டனவே! நாம் எவ்வகையில் முன்னேறியிருக்கிறோம்!"

-காலம் அவரைத் தழுவிக்கொள்ள விரைந்துகொண்டிருக்கையில் அவர் விடுத்த வினா இது!

**"காந்தியாரின் கொள்கைகளை முற்றிலும் கடைப் பிடித்துச் செல்ல நூற்றாண்டுகள் பலவாகும்!"** அருகிலிருந்தவர் அவரை "ஏமாற்றிட"ச் சொன்ன சொற்கள் இவை.

**'இல்லை! இல்லை! நாம் ஒரு வகையில் முன்னேறியுள்ளோம். அவரை நாம் முற்றிலும் மறப்பதில்தான் முன்னேறியிருக்கிறோம்!"**- "ஏமாற" மறுத்தும் பொய் அமைதிக்குள் தன்னைப் புகுத்திக்கொள்ள மறுத்தும் குமரப்பா விட்ட பெருமூச்சுக்களின் வார்த்தை வடிவங்கள்தான் இவை.

ஆம்! காந்தியாரை எந்நேரமும் நெஞ்சில் நிறுத்தியிருந்தால், காந்தியாரின் சீடர்கள் ஆளுக்கொரு மூலையாய் ஓடியிருக்கமாட்டார்கள்; மீராபென் போன இடம் தெரிந்திருக்கும்; வினோபா தனி வழி புறப்பட்டிருக்கமாட்டார்; குமரப்பா தாயகத்திற்கு ஓடி வந்திருக்கமாட்டார்; இருந்த இடத்திலேயே இருந்து தொண்டைத் தொடர்ந்திருப்பர்!

குமரப்பா தமிழனாகப் பிறந்ததால் உரிய இடத்தைப் பெறாது இழந்தார்.

சொல்ல விடாது வெட்கமும் வேதனையும் தடுக்கின்றன; என்றாலும் சொல்லி விட்டேன்.

தமிழனாய்ப் பிறந்ததால், வார்தாவினை மறந்து கல்லுப்பட்டிக்கு வந்து ஒதுங்கியிருந்தார் அவர்.

வளஞ்செறிந்த வார்த்தைகளால் வடித்தெடுக்கமுடியாத அவலச் சுவடியாகிவிட்டது, அவரது வாழ்வு!

குமரப்பாவின் தொண்டினைப் போற்றுவோம்; வணங்குவோம்;
அவர் உழைத்துக் கெட்ட கதை "அகிலபாரதங்களுக்கு" வருங்காலத்தை உணர்த்தும் ஒளி விளக்கு என்றும் சொல்லுவோம்.

## என் தாய்

(3)

முப்பது ஆண்டுகட்கு முன்னே-ஒரு நாள்-என் தந்தையைச் ..........' பிறகு முன்னூறு நாள் என்னைச் சுமந்தாள்!!

சித்திரைத் திங்களிலே நான் பிறந்தால், பெற்ற தகப்பனின் உயிரைக் கொத்தோடு பிடுங்கி-பொத்தென்று சாவிலே சாய்த்துவிடுவேன் என்று சாத்திரம் சொல்லிற்று.

தந்தையைப் பெற்ற என் பாட்டி-தவித்தாள்! இடை நோக என்னைப் பெறவிருக்கும் தாய் நொந்தாள்!

குழந்தையை-அதாவது என்னை. கருவிலே கொல்வதற்கு, மருந்துகள் தரப்பட்டன, "பப்பாளி" எனும் வெப்பம், கொப்பளிக்கும் பழம் தரப்பட்டது!

என் தாய் தின்றாள்-வேதனையை உதட்டுக்குள் மடித்து மென்றாள்!

பாவம்! ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று-பையனென்றபோதே பரிந்தெடுத்து-உச்சி முகர்ந்து, கனகமழை தரக் கனவு கண்டு கொண்டிருந்த ஆசை ஒரு பக்கம்-நான் பிறந்தவுடன்-தான் கைப் பிடித்து மணவறை ஏறிய கணவனை, பிண ஊர்வலத்தில் பார்த்துவிட்டு, பூவிழந்து, பொட்டிழந்து, கைம்பெண்ணாய் வாழ வேண்டுமா என்ற அச்சம் ஒரு பக்கம்.

இந்த வேதனை ஊஞ்சலிலே என் தாய் ஆடிக்கொண்டிருந்தாள். நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. காலத்தைத் தேய்த்துச் சுடுகதிரோன் வந்தான்; எனக்குக் காலமும் வந்தது! பிறந்தேன். கொல்ல முயன்ற தாயின் முன் பிறந்தேன்!

'பிறந்தானா பேரன்? ஐயகோ! என் மகன் இறந்தானா?' என்று பாட்டி தலையில் அடித்து அழுதாள். தாய்மை? என் தாய்?

'தாயே! ஓ! என் தாயே! கருவிலே நான் சாகவில்லை. பிள்ளை எனும் உருவிலே நான் வந்த நேரம் இருள்தானே! என் பிஞ்சு நெஞ்சிலே-நீ கை வைத்துக் கொன்றிருக்கலாம்!...

ஒரு குழந்தை இறந்தால் இன்னொன்று பெறலாமே! நீ!...உன் கணவன்-என் அப்பன்-இறந்த பின்னர் பெறமுடியாதே நீ! என்னை மன்னித்தாயா? என்னை நீ நம்பினாயா? தனக்காக வாழாது பிறருக்காக வாழ்வதுதான் தாய்மை என எண்ணிவிட்டாயா? தாயே! என்னை நீ தீர்த்திருந்தால்...தமிழகத்தை-திருக்குறளை, தென்னகத்து அண்ணனை நான் சந்தித்திருக்க முடியாதே! அம்மா! சாதகம், சொன்னது பொய்யோ-மெய்யோ, ஆனால் இன்று நீ மட்டும் விதவைதான்! உண்மை! உன் நலத்தை நீ எண்ணியிருந்தால்-இன்று தென்னவர் நலத்தை எண்ணும் 'அண்ணன் படையிலே' ஒரு ஆள் குறைந்திருக்குமே!

தனக்குவமை இல்லாத என் தாயே! உன் தாள் சேர்ந்தால் அல்லாது என் மனக் கவலை மாற்றல் அரிது!

விண்ணுக்கும் உவமை சொல்வார்-இம்மண்ணுக்கும் உவமை சொல்வார் கவிஞர், 'என் தாய்' எனும் குருதியைப் பாலாக்கிக் கொடுத்தவளுக்கு, நான் தூங்கத் தான் கண் விழித்துக் கிடந்தவளுக்கு உவமையில்லை! உவமையில்லை!!

—கோ. இறைமுடிமணி

## ★ தொண்டு ★

மலேயாவில் பொதுப்பணியாற்றி வரும் கே. வி. கே. சாமி நினைவுத் தொண்டர் படையினர் அண்மையில் தமது மூன்றாமாண்டு விழாவைக் கொண்டாடினர். அவர்கள் பொதுப்பணி வெல்க! வாழ்க!

# வந்து போனவர்கள் வாழ்க்கைக் குறிப்புகள்

— இராம. கண்ணப்பன் —

ஒரோசிலோவ்.

கிளிமென்ட் எப்ரமோவிச் ஒரோசிலோவ், எகதெரிஞேசுலாவ் மாநிலத்தில் பாக்முத் வட்டாரத்தில் வெர்க்னே கிராமத்தில் ஒரு இரயில்வேத் தொழிலாளியின் குடும்பத்தில் 1881-ல் பிறந்தார். சிறு பிராயத்திலேயே (1896) அவர், அல்செவ்சுகியில் ஓர் உலோகத்தொழில் ஆலையில் வேலை செய்யத் தொடங்கினார். 1899 ல் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு, வேலை நிறுத்தம் செய்ய ஏற்பாடு செய்ததற்காகக் கைது செய்யப்பட்டார். 1903-ல் அவர் லுகான்சுக் ரயில்வே என்சின் கட்டும் ஆலையில் வேலைசெய்து கொண்டிருந்தபோது, உருசிய சோசல் டெமாக்ரட்டிக் கட்சியில் சேர்ந்து, அக்கட்சியின் வேலைகளில் போல்சிவிக் ஆதரவாளராகப் பங்கு கொண்டார். முதலாவது உருசியப் புரட்சியின்போது (1905), லுகான்சு தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். உருசிய சோசல் டெமாக்ரடிக் கட்சியின் நான்காவது காங்கிரசிலிருந்து ஒரோசிலோவ், அனேகமாகத் தொடர்ச்சியாக எல்லாக் கட்சிக் காங்கிரசுகளுக்கும் பிரதிநிதியாகத்தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளார்.

சார் சர்க்கார் ஒரோசிலோவை அன்னரது புரட்சி நடவடிக்கைகளுக்காகப் பலமுறை கைது செய்து நாடு கடத்தியது. ஆனால் அவர் பலமுறை தப்பிவந்து, தலைமறைவாகப் புரட்சி வேலைகளை நடத்திவந்தார். 1914-ல் ஒரோசிலோவ், சாரிட்சின்னிலிருந்த யுத்த தளவாடத் தொழிற்சாலையில், கட்சி வேலைசெய்து வந்தார். 1915-ம் ஆண்டு இளவேனிற் காலத்தில் பெட்ரோகிராடிற்குச் சென்றார். அங்கு அவர் தொழிலாளர், இராணுவ வீரர்கள் மத்தியில் செயல்வன்மையுடன் பணியாற்றி வந்தார். 1917 ல் பிப்ரவரிப் புரட்சியின்போது, இராணுவச் சிப்பாய்களிடம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, இசுமைலோவ்சுகி ரெசிமெண்ட் பூராவையும் புரட்சிக்கு ஆதரவாகத் திருப்பினார், ஒரோசிலோவ். பிப்ரவரிப் புரட்சியின் ஆரம்ப நாட்களிலிருந்தே ஒரோசிலோவ், பெட்ரோகிராடு தொழிலாளர் பிரதிநிதிகள் சோவியத்தின் உறுப்பினராக இருந்தார்.

அக்டோபர் புரட்சியின் தருவாயில் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் கமிட்டி, டான்பாசில் புரட்சிகர வேலைகளைத் திட்டமிட்டு நடத்துவதற்காக ஒரோசிலோவை அனுப்பி வைத்தது. 1917 செப்டம்பரில் அவர் லுகான்சு நகரத் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சியில் செயல்வன்மையுடன் பங்கு கொண்டவர்களில் ஒருவர் ஒரோசிலோவ்.

தான் டான்பாசு தொழிலாளர்களிடையே உருவாக்கியிருந்த ஒரு கொரில்லாப்படை பிரிவிற்கு, அவரே தலைமை வகித்து, 1918-ல் யுக்ரைனில் செர்மென் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடினார். தனித்தனி இராணுவ யூனிட்டுகளைக் கொண்டு நிறுவப்பட்ட ஐந்தாவது சைன்யத்திற்கு ஒரோசிலோவ் தலைமை தாங்கினார். இந்த சைன்யம், செர்மன் ஆக்கிரமிப்பாளர்களும் டான்கோசக் எதிர்ப்புரட்சிக் கூட்டத்தினரும் போட்டிருந்த இராணுவ வளையத்தை முறித்துக்கொண்டு, மூன்று மாதக் கடும் போருக்குப் பிறகு, சாரிட்சின் வந்து சேர்ந்தது. இங்கு வெள்ளைப் படையினரிடமிருந்து சாரிட்சினை (இப்பொழுது ஸ்டாலின்கிராடு) தற்காத்து வந்த 10-வது சைன்யத்தின் தளபதிப் பதவியை ஏற்றார். யுக்ரைன் பூராவும் செர்மென் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு 1918-ம் ஆண்டின் இறுதியில் ஒரோசிலோவ், யுக்ரைனியக் குடியரசின் உள்துறை மக்கள் கமிசாராக நியமிக்கப்பட்டார். 1919 மே மாதத்தில் அடாமன் கிரிகோரியேவின் தலைமையில் நடத்தப்பட்ட கலகத்தை, ஒரோசிலோவின் தலைமையில் இயங்கிய யுக்ரைனியப் பாதுகாப்புப் படையினர் ஒடுக்கினர். 1919 சூனில் ஒரோசிலோவ் 14 வது சைன்யத்தின் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். பிறகு அவர், டெனிகின். பெத்லூரா இவ்விருவரின் எதிர்ப்புரட்சி சைன்யங்களுக்கு எதிராக யுக்ரைனின் தற்காப்பிற்கு வழிகாட்டினார். 1919 நவம்பர் ஆரம்பத்திலிருந்து ஒரோசிலோவ், முதலாவது குதிரைப் படையின் புரட்சிகர இராணுவக் கவுன்சிலுடைய உறுப்பினரானார். அவர் டெனிகினை முறியடிப்பதிலும் (1919-1920), யுக்ரைனைப் போலிசு படையெடுப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதிலும், வரங்கலின் துருப்புகளை முறியடிப்பதிலும் பங்கு கொண்டார்.

லெனினின் பிரேரணையின்பேரில், பத்தாவது கட்சி காங்கிரசானது, அக்காங்கிரசில் கூடியிருந்த ஏராளமான பிரதிநிதிகளிலிருந்து ஒரோசிலோவைத் தேர்ந்தெடுத்து; புரட்சிப் படைகளுக்குத் தலைமை தாங்கும்படிப் பணித்தது. குரோன்சுதாத்தில் நடைபெற்ற சோவியத் - எதிர்ப்புக் கலகத்தை, 1921 மார்ச்சில், புரட்சிப்படைகள் ஒரோசிலோவின் தலைமையில் முறியடித்தன.

கட்சியின் 10 வது காங்கிரசிலிருந்து (1921) எல்லாக் கட்சிக் காங்கிரசுகளிலும் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு ஒரோசிலோவ் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளார். 1926-லிருந்து அவர் கட்சி மத்தியக் கமிட்டி பொலிட் பீரோவின் உறுப்பினராக இருந்து வந்துள்ளார்.

1921-1924-ல் ஒரோசிலோவ், வடகாகேசியன் இராணுவப் பிரதேசத்திற்கும், 1924 - 1925-ல் மாஸ்கோ இராணுவப் பிரதேசத்திற்கும், தளகர்த்தராகப் பணியாற்றினார். 1924-ல் அவர் சோவியத் யூனியனின் புரட்சிக்கரக் கவுன்சில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதற்கு அடுத்த ஆண்டு இராணுவ, கப்பற்படை விவகாரங்களுக்கான மக்கள் கமிசாராகவும், சோவியத் யூனியனின் புரட்சிகர இராணுவக் கவுன்சிலின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார் 1934-லிருந்து 1940 வரை ஒரோசிலோவ், சோவியத் யூனியனின் தற்காப்பு இலாகாவினுடைய மக்கள் கமிசாராகப் பணியாற்றினார். 1935-ல் அவர் சோவியத் யூனியனின் மார்சல் ஆக்கப்பட்டார்.

1940 ல் ஒரோசிலோவ், சோவியத் யூனியனின் மக்கள் கமிசார்கள் சபையின் துணைத்தலைவராகவும், சோவியத் யூனியனின் தற்காப்புக் கமிட்டியின் தலைவராகவும் ஆனார்.

மகத்தான தேசபக்த போரின் போது ஒரோசிலோவ் சோவியத் சைன்யத்தில் தலைமைப் பதவிகளை வகித்தார். அக்காலத்தில் அரசாங்கத் தற்காப்பு கமிட்டியின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார். 1946 மார்ச்சில் அவர் சோவியத் யூனியன் அமைச்சரவையின் துணைத் தலைவராகநியமிக்கப்பட்டார். 19-வது கட்சிக் காங்கிரசிற்குப் பிறகு அவர் சோவியத் யூனியன் பொதுவுடமைக் கட்சி மத்தியக் கமிட்டித் தலைமைக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1953 மார்ச்சில் ஒரோசிலோவ் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிளிமென்ட் எபரமோவிச் ஒரோசிலோவிற்கு, அவர் சோவியத் அரசிற்கு ஆற்றிய மகத்தான சேவைக்காக, ஏராளமான விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1956-ல் அன்னருக்கு சோவியத் யூனியனின் வீரர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

★

**சோவியத் யூனியன் அமைச்சரவையின் முதலாவது துணைத் தலைவர் ஆவார், பிரோல் ரோமனேவிச் கோசுலோவ்.**

பிரோல் ரோமனேவிச் கோசுலோவ் ரியாசான் பிராந்தியத்தில் லோட்சினினே கிராமத்தில் ஒரு ஏழை உழவனின் குடும்பத்தில் 1908-ல் பிறந்தார். தனது 15-வது வயதிலிருந்து அவர் கரசிமோவிலிருந்து கிராசுனி பஞ்சாலைத் தொழிற்சாலையில் வேலை செய்யத் தொடங்கினார். அங்கு அவர் பஞ்சாலைத் தொழிலாளியாகப் பயிற்சி பெற்று, துணை போர்மன் ஆனார். இங்கு வேலை செய்யும்போதுதான் இளம் பொதுவுடைமைக் கழகத்தில் சேர்ந்தார். பிறகு 1926-ல் பொதுவுடைமைக் கழகத்தினுடைய தொழிற்சாலைக் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு இளம் பொதுவுடைமைக் கழகத்தின் காசிமோவ் உயூசுத் கமிட்டியின் ஒரு இலாகாவினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1925-ல் அவர் லெனின்கிராடிற்குச் சென்று, அங்கு பல தொழில் கல்லூரியில் சேர்ந்து படித்தார். படித்துப் பட்டம் பெற்றபின் கோசுலோவ், நாட்டிலுள்ள மிகவும் பழைய உலோகத் தொழில் கேந்திரங்களில் ஒன்றான இழிவ்சுகியிலுள்ள ஒரு புளுமிங் ஆலையில் மேற்பார்வை அதிகாரியாகப் பணியாற்றினார். அங்கே பொதுவுடைமையர் அவரை 1939-ல் கட்சிக் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுத்தனர். பிறகு 1940-ல் அவர் இழிவ்சுக் கட்சிக் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1944-லிருந்து மூன்று ஆண்டுகள் வரை எப். ஆர். கோசுலோவ், சோவியத்யூனியன் பொதுவுடைமைக் கட்சி மத்தியக் கமிட்டியில பொறுப்புள்ள பதவிகளை வகித்தார். பிறகு அவர் பொதுவுடைமைக் கட்சியின் குபிசேவ் பிராந்தியக் கமிட்டியின் இரண்டாவது செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாட்டின் மிகப் பெரிய என்சினியரிங் தொழில் நிலையமான கிரோவ் ஆலையில் கட்சி ஆர்கனைசராகப் பணியாற்றுவதற்காக 1949-ல் கட்சியின் மத்தியக் கமிட்டி கோசுலோவை லெனின்கிராடிற்கு அனுப்பி வைத்தது. அதற்குப் பிறகு சிறிது காலத்திற்குள் அவர் லெனின்கிராடு நகரக் கட்சிக் கமிட்டியின் செயலாளராகவும், 1953 நவம்பரில் கட்சியின் லெனின்கிராடு பிராந்தியக் கமிட்டியின் பிரதமச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கட்சியின் 19-வது, 20-வது காங்கிரசுகளில், சோவியத் யூனியன் பொதுவுடமைக் கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957 பிப்ரவரியில் கட்சி மத்தியக் கமிட்டித் தலைமைக் குழுவின் மாற்று உறுப்பினராகவும், அதே ஆண்டு சூன் மாதத்தில் முழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எப். ஆர். கோசுலோவ் 1957 லிருந்து 1958 மார்ச் மாதம் வரையிலும் உருசிய சோவியத கூட்டுக் குடியரசின் அமைச்சரவைத் தலைவராக இருந்தார்.

தற்பொழுது கோசுலோவ், சோவியத் யூனியன் அமைச்சரவையின் முதல் துணைத் தலைவராக விளங்குகிறார். ★

# கழகத்தின் பொன்னேடு!

ப. நெடுமாறன்

"மாணவர் பேரணி மத வேழங் களெனக் கிளம்பிற்று காண்!
தாயகப் பெரும்படை மாமழை முகி லென இடித்தது கேள்!
காவலர் முகம் கடுத்தனர்; மேல் நிலை தமக்கே என்றனர்; எனினும் பகை தூள்! தூள்! தூள்தானே!
கொதித்தனர்; வெடித்தனர்! மலையினை இடித்தனர்; பகையினை முடித் தனர்! இனி இவருக்கு நிகர் எவரே!"

-கழகத்தின் பொன்னேடாய், கவிதைப் பூங்காடாய், ஆர்த்தெழுந்து மலர்ந்து நின்ற திருச்சி மாணவர் மாநாட்டைக் கண்ட நண்பர்கள் இப்படிப் பேசிக்கொண்டனர். சொல்லுக்குச் சொல் சுவையேற்றும் வல்லமை மிக்கார்-உருத்த பார்வையில் பகை மரித்தொழிய எழுந்து நின்றோர்-இட்ட ஆணையை விரைந்தே முடித்து, கெட்ட வடக்கைக் கீழ் நிலைக்கு ஓட்டுவோர் ஆன பல திறத்தார்-புயல் மறத்தார், திரண்டெழுந்தனர்; திருச்சியில் கூடினர்!

★

"இது பாண்டியன் படை வீடோ?"
"இல்லை! சேரன் பாசறையோ!"
"இருக்குமிடம் மறந்தீரோ! இது சோழமண்டலம்; திருச்சி நகரம்; தேவர் மன்றம்! திரண்டிருப்போர் திராவிட மாணவர்! தமது முதல் மாவட்ட மாநாட்டை நடத்துகின்றனர்!"

-இப்படி நண்பர்கள் காட்சியின் அழகை வியந்தனர்.

எல்லோரும் வியந்திட அப்படி அமைந்திருந்தன வெங்கடாசலத்தின் ஏற்பாடுகள். உணர்ச்சியும் ஆற்றலும் மிகுந்த மாணவர்களைக் கொண்ட வரவேற்புக் குழு அவருக்கு உதவி நின்றது! அத்தோடு அன்பில் தர்மலிங்கமும் எம். எஸ். மணியும் துணை நின்றனர் என்றால், வெற்றிக்கா ஐயம்?

திரண்ட சக்தியாய்த் திருச்சி மாவட்டத் திராவிட மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடி நின்றனர் அன்று. காலை 9 மணிக்கெல்லாம் நிகழ்ச்சிகள் தொடங்கிவிட்டன. வழக்கப்படி திறப்புரை, வரவேற்புரை, தலைவரை முன் மொழிந்து வழி மொழிந்து ஆசனத்திருத்தல் முதலியன நடந்தன.

திறப்பாளர் தோழர் நெடுமாறனுக்கும் தலைவர் தோழர் பில்லப்பனுக்கும் ஒரு பொருத்தம் பெரும் பொருத்தம். இருவரின் தந்தைமாரும் காங்கிரசார். காலஞ்சென்ற உடையப்பாவைப்போல் இராமநாதபுர மாவட்ட ஆட்சியை நடத்திப் பல நல்லன செய்த காங்கிரசாரைக் காண்பதரிது. அவர் குடும்பத்தின் பெயரைச் சொன்னாலே அம்மாவட்டத்திலும் காங்கிரசாரிடையேயும் தனி மதிப்பு. காமராசர் அந்தக் குடும்பத்தின் தொடர்பை விட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவ்வழி வரும்போதெல்லாம் அவர்கள் வீட்டுக்குச் சென்று வருவார்கள். அவ்வளவு காங்கிரசார்வம் நிறைந்த குடும்பத்திலே, நமக்குக் கிடைத்த ஒளிநிலவு தோழர் உ. பில்லப்பன். தோழர்களிடையே பேசிக்கொண்டிருக்கையில் தவழும் தென்றலாகத் திகழும் அவர், அன்று தனது தலைமையுரையை நிகழ்த்துகையில் புரட்சி அனலானார்; காவிரிப் புனலானார். மாணவர் கழகத்தின் எதிர்காலவளர்ச்சி எதிற்செல்லும் என்று அவர் கணித்துச் சொன்னபோது நம்பிக்கையே ஒளிர்ந்தது. புதிய திராவிடம் பெறுதற்கு மாணவர் கழகம் தந்துவிட்ட வலிய கருவி அவர்.

உ. பில்லப்பன்

தோழர் ப. நெடுமாறனின் தந்தையார், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர்களுள் ஒருவர். அவ்வூர்த் திருவள்ளுவர் கழகத்திற்கும் அவரே தலைவர்; மேலாகச் சைவத்தில் மாறாத நம்பிக்கை கொண்ட காங்கிரசார். ஆனாலும் தன் மகனின் வழியை அடைத்து நிற்காமல் அளித்த ஊக்கத்தால்தான். இன்று ஓர் ஒளிமுத்தாய் ப. நெடுமாறன் நமக்குக் கிடைத்தார். நெடுமாறனின் திறப்புரையும் பல நல்ல செயலுக்கான திட்டங்களையும் நெறிகளையும் காட்டியது. ஆற்றொழுக்கான நடையில் நூற்றுக்கணக்கான கருத்துக்களைப் பொழிந்த அத்தென்பாண்டி வீரனைத் திராவிடம் வரவேற்கிறது!

தீர்மானங்கள் பலவும் நாட்டு நிலையையும், இனி மாணவர்படை மேற்கொள்ளவிருக்கும் வழிகளையும் சொல்லின. அவற்றைத் தனதுரையில் விளக்கிய மாணவர் கழகப் பொதுச் செயலாளர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் கருத்துச் சுவையைப் படைத்தார். கட்டுப்பாட்டை வலியுறுத்திய அவரது ஆணைகள் வருங்காலத்திற்கோர் அறை கூவல் விடுப்பனவாக அமைந்தன. அன்று காலையிலிருந்து இரவு வரை அவருடன் பேசிச் செவி விருந்தளித்த டி. கே. பொன்னுவேலு கோவைச் செழியன், வே. சௌந்தராசன் முதலியோர் உள்ளிட்ட மாணவத் தோழர்கள் எழுந்து நிற்கும் சமுதாயத்தின் ஒளி விளக்குகளாயினர்; குமுறி நிற்கும் எரிமலையின் சிதறல்களாயினர்!

தோழர் எம். எஸ். வெங்கடாசலம், அண்ணாவின் "ஹோம்லண்டில்" பணிபுரியும் பெருமை பெற்றவர். இது போதும் அவரது செயல் திறனை எடுத்துச் சொல்ல. தான் பிறந்து, எழுந்து, வளர்ந்த திருச்சியில் ஓர் எஃகுக் கோட்டையை நிறுவிக் காட்டினார். அவர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு அவர் படித்த கல்லூரியிலே எதிர்ப்பு. காவிரிக்கரையடுத்து இருக்கும் இரு கல்லூரிகளும் தம் மாணவர்கள் மாநாட்டுக்குச் செல்லக்கூடாது என்று கடுமையாக எச்சரித்திருந்தன. என்றாலும் வெகு பல மாணவர்கள் அக்கல்லூரிகளின் தலைவர்களை அறை கூவுவதுபோல் திரண்டு வந்தனர்; தேவர் மன்றத்தில் நிற்கவும் இடமில்லாது போயிற்று. இந்த அழகிய நிலையைச் சுட்டிக்காட்டி, தம் நன்றியுரையில் தடை விதித்தோரைச் சொல்லால் "குத்திக் கொன்றார்" வெங்கடாசலம்! நன்றியுரைப்பதையும் அழகாகவும் கருத்தாழத்தோடும் சொல்ல முடியுமென்பதற்கு அவரது நன்றியுரையே சான்றாகிவிட்டது.

எம். எஸ். வெங்கடாசலம்

26-1-60 காலையிலிருந்து இரவுவரை திரண்டிருந்து, கருத்தினைக் கேட்டுக் கருத்தினைக் கொடுத்தனர் திருச்சி மாவட்ட மாணவர். அனைவர்க்கும் திராவிடம் வாழ்த்துக் கூறுகிறது.

வெடித்த யுகத்தின் எழுந்த சக்திகளே! உங்களை வாழ்த்துகிறோம்!

சோழன் மண்டலத்தில் ஒளிர்ந்த, காலத்தின் விடி வெள்ளிகளே! உங்களைப் போற்றுகிறோம்!

உங்களுக்கு மறுமுறையும் வாழ்த்துக்கூறும் இதே நேரத்தில், ஒதுங்கி நிற்கும் மாணவர்களுக்கு இதை நினைவூட்டுகிறோம்: "இந்நாடு பிறன் கையில்; எதிர்காலம் உங்கள் கையில்!"

— மா. பாண்டியன்.

# வில்லி லில்லி!

மா. தங்கவேலர்

மதுராந்தகம் மாணிக்கவாசகரின் அழகிய பங்களாவின் முன்னே அதுவரை ஓடோடி வந்த புத்தம் புதிய கார் ஆடி அசைந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய ஆலை அரசு வேதநாயகத்தின் குடும்பத்தை, பங்களாவிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்து வரவேற்ருர் மாணிக்கவாசகம். பங்களாவின் முன் பக்கத்துப் பூந்தோட்டத்திலிருந்த மலர் வகைகள் கிளப்பிய புது மணத்திலே இலயித்துப் போய்ப் புன்னகை பூத்த முகத்தோடு முன்னே நடந்து போனுர் வேதநாயகம். அந்த பங்களா மாடியிலிருந்த சன்னலோரமாக ஒதுங்கியிருந்து எட்டிப் பார்த்தாள் நளினு. அப்போது அவளது இமைகளைப் போலவே இதயமும் துடித்துக்கொண்டிருந்தது.

படிகளை மிதித்துக்கொண்டே, ''தம்பி வரவில்லையா ?' என்று கேட்டார் மாணிக்கவாசகம்.

''குமார்தானே ! அவன் வரவில்லை. நாங்களும் கூப்பிடாமலில்லை. அவன் தான் எல்லாப் பொறுப்பையும் எங்கள் மீதே சுமத்திவிட்டானே. இந்தக் காலத்திலும் இப்படி ஒரு பிள்ளை எங்களுக்கிருக்கிறதே. இதுதான் அளவிடமுடியாத மகிழ்ச்சியைத் தருகிறது''

வேதநாயகத்திடமிருந்து மகிழ்ச்சியோடு பிறந்து வந்த அந்த பதில் நளினுவின் இதயத்துக்கு அவ்வளவாக மகிழ்ச்சியைத் தரவில்லை. குமாரின் பார்வைக் குளிர்ச்சிக்காக பல மணி நேரங்களைக் கொன்று அவள் செய்துகொண்டிருந்த அலங்காரத்தைப் பார்த்து அவளே பெருமூச்சு வீட்டுக் கொண்டாள். பிள்ளையைப் பெற்ற பெற்றேரைக் கண்டு கொள்வதிலே மட்டும் நளினுவின் மனம் திருப்தியடைந்து போய் விடவில்லை புகைப் படத்திலே கண்டு களித்த அந்தச் சுந்தர முகத்தானை, இன்று நேரிலே பார்த்துப் பூரித்திடலாமென நெஞ்செல்லாம் ஆசையைத் தேக்கியிருந்தாள். ஆசை அறுந்தது. வரவேண்டியவன் வரவில்லை. யாராரோ வந்திருந்தார்கள். அவர்கள் ஓடி அலைந்து வரவேற்றுக்கொண்டிருந்த கும்பலிலே நளினுவும் கலந்தாள்.

மிகப்பெரிய ஆடம்பரமானவிருந்துக்குப் பிறகு, தான் கொண்டுவந்திருந்த வைரச் சங்கிலியை பழத்தட்டிலே வைத்து மாணிக்கவாசகத்தின் முன்னே நீட்டினுர் வேநாயகம். மாணிக்கவாசகம் பயபக்தியோடு அந்த வெள்ளித்தட்டைப் பெற்றுக்கொண்டே, ''இந்த உங்கள் சம்பந்தத்தால் நாங்கள் எவ்வளவோ பெருமையடைகிரேம்'' என்று பூரித்துக் கூறினுர். புகழ் மாலையைத் தாங்க முடியாத வேத நாயகம் புதுப் பெண்ணைப் போலத் தலை தாழ்த்திக் கொண்டார்.

நளினுவை - குமாருக்காக நிச்சயப் படுத்திக்கொண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு, அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் எதிர்பார்த்த 'நாட்டியம்' துவங்கியது.

குமாரி மாலா அரங்கத்திலே ஆடிக்கொண்டிருந்தாள். மொத்தத்தில் அந்த பங்களா முழுவதுமே இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அப்போது...

தந்திச் சேவகன் வெளியிலிருந்து சைக்கிளின் மணி ஓசையைக் கிளப்பினுன். பங்களா வாயிலிலே பாராயிருந்த வேலைக்காரன், அந்த அவசரத் தந்தியைப் பெற்றுச் சென்று வேதநாயகத்திடம் கொடுத்தான. தந்தி முகவரியைப் பார்த்தார் வேதநாயகம். அவரது பெயருக்குத்தான் அந்தத் தந்தி வந்திருக்கிறதென்பதைத் தெரிந்ததும் பரபரப்போடு பிரித்தார்.

''அவசரம்-புறப்படவும்''... என்ற தந்திச் செய்தியைப் படித்ததும் துள்ளி எழுந்தார் வேதநாயகம். எழுந்த அவசரத்திலேயே தந்தி கொடுத்தவரின் பெயரைப் படித்தார்.

''சோமு'' என்றிருந்த அந்தப் பெயரைப் படித்ததும் அவரது வேலைக்காரனை நினைவுபடுத்திக்கொண்டார். 'ஆமாம் குமாருக்குத்தான் ஏதோ ஆபத்தாக இருக்க வேண்டும், 'அய்யோ... குமார் !'... வேதநாயகத்தின் நெஞ்சம் அலறியது. கண்ணீர் விடாத குறையாய்க் கண் கலங்கித் தந்தியை மாணிக்கவாசகத்திடம் காட்டினுர். அந்த வேதனையான நிலையை நினைத்துப் பார்த்தபோது இதயம் துடிதுடித்தது மாணிக்கவாசகத்துக்கு. அதைவிட அதிகமாகத் துடித்தது செய்தியைக் கேள்விப்பட்ட நளினுவுக்கு; மூடிய இமைகளுக்கு வெளியே இரண்டு சொட்டுக் கண்ணீரை உருண்டோடச் செய்தாள். 'புது இன்பம் காட்டக் காத்திருந்த பொன் நிலவு வராமலே போய்விடுமா ?'... நளினுவின் நொந்த இதயம் கேட்டுக்கொண்டது. ஆனுல் சொந்தம் பாராட்டிட வந்த அந்த உறவுக்காரர்களோ... வேகமாகச் சென்று வந்த காரிலேயே திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களோடு சேர்ந்து மாணிக்கவாசகமும் புறப்பட்ட நிகழ்ச்சி, சிறிது மனத் தெளிவைத் தந்தது நளினுவுக்கு. வானத்தின் எங்கோ ஒரு மூலையிலே நட்சத்திரமொன்று அறுந்து வீழ்ந்தது... அதையும் பார்த்துவிட்டுத் தூரத்திலே பார்வையிலிருந்து மறைந்துகொண்டிருந்த வேதநாயகத்தின் காரையும் பார்த்து வைத்தாள்.

உருண்டோடிய காரின் சக்கரங்களும், அரங்கத்திலே துள்ளிக் குதித்த மாலாவின் அழகுக் கால்களும் நளினுவின் கண் முன்னே மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தன.

★

சிங்காரச் சென்னையின் நீண்டு சென்ற வீதியொன்றின் வலது பக்கத்திலே தெரிந்த மஞ்சள் மாளிகையின் வெளியே 'டாக்ஸி' ஒன்று காத்துக் கிடந்தது. அதன் டிரைவர் மாடியைப் பார்ப்பதும், பாதையிலே நடந்து கொடுப்பதுமாக இருந்தான்.

மாளிகை மாடியினுள்ளே சிகரெட்டைப் பற்றவைத்து ஊதித் தள்ளிக் கொண்டிருந்த... லில்லி 'சோபா'விலே சாய்ந்திருந்தாள் ! நடுத்தர வயதுடைய அந்த மங்கையின் முகம் பரபரப்போடு தெரிந்தது. எதிரே அமர்ந்து நிலைக்கண்ணுடியின் முன்னே சிங்காரித்துக் கொண்டிருந்த 'அல்லி'யின் மீது அவளது பார்வை திரும்பியது.

''அல்லி ! நகங்களுக்கெல்லாம் 'பாலிஷ்' போட்டுக்கொண்டாய் அல்லவா ? அந்த ரோஸை எடுத்து கன்னத்திலே இன்னும் கொஞ்சம் தடவிவை. அந்தக் கேசத்தை இழுத்து நெற்றியிலே பட்டும் படாமலும் நெளியவிடு.''

...அவள் அலங்கார அகராதியை சொல்லிக்கொண்டிருந்தாள். அல்லி அதையெல்லாம் செய்து முடித்துவிட்டு வெற்றிப் பெருமிதத்தோடு லாகவமாக எழுந்து நின்ருள். சோபாவுக்கு முன்னேயிருந்த சிறு மேசையிலே, சிகரெட்டுத் துண்டைப் போட்டுவிட்டு லில்லியும் எழுந்தாள். அல்லியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிக் கொண்டே, ''கவனமாகப் படத்தை எடுத்து வைத்துக் கொண்டாயல்லவா?'' என்று எச்சரிக்கையோடு கேட்டாள் லில்லி. 'இதோ ! கைப் பையினுள்ளே கவனமாக வைத்திருக்கிறேன் அக்கா. படத்தை மட்டும் அல்ல...அதன் நெகடிவையும் இங்கே பத்திரமாக வைத்திருக்கிறேன் !'...

தங்க முலாம் பூசப்பட்ட பாதரட்சைகளை மாட்டிக்கொண்டே அல்லி பேசினுள்.

''சமர்த்துத் தங்கையே! சொன்னது நினைவிருக்கட்டும். சாதுரியமாகநடிக்க வேண்டும். அழுதாலும் அதட்டினுலும் அசந்து விடாதே. எத்தனையோ முறை நீ இது மாதிரியான நாடகங்களிலே வேடமிட்டிருந்தாலும்...இப்போது நீ நடித்துக் காட்டும் நடிப்புத்தான் நம்மை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் காட்டும். இதிலே தோல்வி யடைந்தால் நிலைமை எவ்வளவோ பயங்கரமானதாகிவிடும். மறந்து விடாதே !''

சற்றுக் கண்டிப்புடனேயே கூறிக்கொண்டு மாடியிலிருந்து இறங்கினுள் லில்லி, அல்லி பின் தொடர,

லில்லி அக்காளும், அல்லித் தங்கையும் சிரித்துக்கொண்டே வாசலுக்கு வந்து நின்றனர். டிரைவர் அவசரமாகக் காருக்குள்ளே பாய்ந்து அமர்ந்தான். லில்லி காரின் பின்புறம் சாய்ந்து கொண்டே தனது கைக்கடியாரத்தைப் பார்த்து ''டிரைவர் சரியாக பத்துக்கெல்லாம் வேதநாயகம் பங்களாவுக்குப் போய்விட வேண்டும். கொஞ்சம் வேகமாகவே போ'' என்று கட்டளையிட்டாள். அந்தக் கட்டளையை எடுத்த எடுப்பிலேயே நிறைவேற்றினுன் டிரைவர். ஆனுல்...

லில்லி மாளிகையை விட்டுப் புறப்பட்ட கொஞ்ச தூரத்திலேயே கார் யாரோ பாதசாரி மீது மோதி நின்றது. லில்லியும் அல்லியும் அலறினர். டிரைவர் வெளியே குதித்து முன் பக்கமாக ஓடிப் பார்த்தான். காரின் சக்கரங்களுக்குத் தப்பிவிட்டான் அந்தப் பாதசாரி. கார் லேசாகத்தான் மோதியிருந்தது. அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாத அவன் மயக்கமடைந்து கார் மீதே சாய்ந்து கிடந்தான்.

...''என்ன டிரைவர் ?''

அல்லி பயந்துகொண்டே குரலெழுப்பினுள்.

''ஆள் தப்பிக்கொண்டான். அடிபடவில்லையம்மா கொஞ்சம் மயக்கம். அது தெளிந்தால் சரியாகிவிடும்''

டிரைவரின் பதிலைக் கேட்டதும் நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்த கைகளை லேசாக எடுத்தாள் அல்லி. டிரைவரை அருகே அழைத்து, அந்த மயங்கிக் கிடக்கும் ஆளையும் காரிலே போட்டுக்கொண்டு காரை மாளிகைக்குத் திருப்பும்படி கூறினுள் லில்லி. அவள் சொல்லியபடி செய்து முடித்தான் டிரைவர். எல்லோருமாகச் சேர்ந்து பாதசாரியை மாடிக்கு எடுத்துச் சென்றனர். அங்கே கட்டிலிலே படுக்கவைத்து...முகத்திலே தண்ணீரைத் தெளித்தாள் அல்லி. அப்போதுதான்அந்த முகத்தை நன்ருக உற்றுப் பார்த்தாள் அல்லி; நெஞ்சம் திடுக்கிட்டது. திகிலோடு அக்காள் லில்லியைப் பார்த்தாள். அவளும் அருகே வந்தாள். டிரைவர் அங்கிருப்பதை சுட்டிக் காட்டினுள் அல்லி.

— 8-ம் பக்கம் —

மார்ச் முதல் நாள்
முல்லை
எங்கும் கிடைக்கும்

# கண்ணீர்!

★★★படவுலகில் சோகப் பாடல்கள் முக்கிய இடம் பெற்று வருகின்றன. அவ்வழியில் ஆசிரியர் கண்ணதாசன் எழுதிய கண்ணீர்ப் பாடல்களுள் சில இவை.

## கண்ணீர்!

பிறக்கும் போதும் அழுகின் ருய்
இறக்கும் போதும் அழுகின் ருய்
ஒருநா ளேனும் கவலையில் லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே (பிறக்)

இரவின் கண்ணீர் பனித்துளி என்பார்
முகிலின் கண்ணீர் மழையெனச் சொல்வார்
இயற்கை அழுதால் உலகம் செழிக்கும்
மனிதன் அழுதால் இயற்கை சிரிக்கும் (பிறக்)

அழுதத னுலே வாழ்ந்தவ ரில்லை
சிரித்த தனுலே தாழ்ந்தவ ரில்லை
பழமை முடிவில் புதுமை பிறக்கும்
புதுமை முடிவில் பழமை திரும்பும் (பிறக்)

அன்னையின் கையில் ஆடுவ தின்பம்
கன்னியின் கையில் சாய்வது மின்பம்
தன்னை யறிந்தால் உண்மையி லின்பம்
தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம். (பிறக்)

படம்: கவலையில்லாத மனிதன்] [இசை: விசுவநாதன்-இராமமூர்த்தி

★ ★ ★

## இன்பத்தின் கண்ணீர்!

காலங்களில் அவள் வசந்தம்!
கலைகளிலே அவள் ஓவியம்!
மாதங்களில் அவள் மார்கழி!
மலர்களிலே அவள் மல்லிகை! (காலங்களில்)

நேரங்களில் அவள் மாலை!
நிலங்களிலே அவள் முல்லை!
ராகங்களில் அவள் ரஞ்சனி!
நவரசங்களில் அவள் நாணம்! (காலங்களில்)

பறவைகளில் அவள் மணிப்புரு!
பாடல்களில் அவள் தாலாட்டு!
கனிகளிலே அவள் மாங்கனி!
காற்றினிலே அவள் தென்றல்! (காலங்களில்)

பால்போல் சிரிப்பதில் பிள்ளை!
பனிபோல் அணைப்பதில் கன்னி!
கண்போல் வளர்ப்பதில் அன்னை!
கவிஞனுக் கினுள் என்னை! (காலங்களில்)

படம்: அப்துல்லா] [இசை: விசுவநாதன்-இராமமூர்த்தி

★ ★ ★

## பாசத்தின் கண்ணீர்!

(ஊமைப் பெண்ணின் மகனுக்கு, ஊமையின் தங்கை பாடும் தாலாட்டு)

தாய்பேச நினைத்ததெல்லாம் நீ பேசவேண்டும்!
தாய்தூங்கத் தாலாட்டு நீ பாடவேண்டும்!
நீ பாடும் தாலாட்டைத் தாய் கேட்கவேண்டும்—தன்
நிலைமாறி அவள் கூட மொழி பேசவேண்டும்!

"அம்மா!" என்றே யழைத்து ஒரு வார்த்தை சொன்னுல்
"மகனே!" என்றேயழைக்க வாய் வார்த்தையில்லை!
நான் பேசும் வார்த்தைகளில் தாய் உள்ளமில்லை!
தாய் உள்ளம் பேசும் மொழி நீ கேட்கவில்லை!

சொல்லென்ன பொருளென்ன மொழியென்ன கண்ணே!
சொல்லாத சொல்லுக்கு விலையேது பொன்னே!
ஒன்ருகி இரண்டாகி மூன்ருன பின்னே,
உலகங்கள் நமையன்றி வேறேது கண்ணே!

படம்: பூமுடித்தவள்] [இசை: விசுவநாதன்-இராமமூர்த்தி

## குமரியின் கண்ணீர்!

சித்திரத்தில் பெண்ணெழுதிச்
சீர்படுத்தும் மாநிலமே
சீவனுள்ள பெண்ணினத்தை
வாழவிட மாட்டாயோ!
காவியத்தில் காதலென்ருல்
கரைந்துருகும் கற்பனையே
கண்ணிறைந்த காதலுக்கே
கண்ணீர்தான் உன்வழியோ? (சித்திரத்தில்)

அன்னையென்றும் தெய்வமென்றும்
ஆர்ப்பரிக்கும் பெரியோரே!
இன்னமுதத் தெய்வமெலாம்
ஏட்டில்வரும் தேன்தானே!
மன்னர்குலக் கன்னியரும்
கண்கலங்க நேருமென்ருல்
மண்டலத்தில் பெண்களுக்கே
வாய்த்தவிதி இதுதானே? (சித்திரத்தில்)

படம்: ராணி சம்யுக்தா] :[இசை: கே. வி. மகாதேவன்

★ ★ ★

## விதவையின் கண்ணீர்!

கண்ணில் தெரிந்தும் கைக்குவராத கானல்நீருண்டு.
கட்டழகிருந்தும் வாழ்க்கையில்லாத கன்னியர் பலருண்டு.
மண்ணில் விளைந்தும் பசிக்குதவாத கனிகள் சிலவுண்டு.
மனதில் இருந்தும் சொல்லில்வராத நினைவுகள் பலவுண்டு.

மழைவிழுந்தாலும் கொடிவளராத நிலங்கள் சிலவுண்டு.
வளர்ந்துவிட்டாலும் மலர்கள் இல்லாத கொடிகள் பலவுண்டு.
மலர்ந்திருந்தாலும் வாசனையில்லா மலர்கள் சிலவுண்டு.
மலர்களிருந்தும் சூடிடமுடியாக் குழல்கள் பலவுண்டு.

அழகைப் படைத்தவன் கடவுளென்ருல்—அவன்
அழிவையும் ஏன் படைத்தான்?
மொழியைப் படைத்தவன் கடவுளென்ருல்—அவன்
ஊமையை ஏன் படைத்தான்?

விழியைப் படைத்தவன் கடவுளென்ருல்—அவன்
குருடனை ஏன் படைத்தான்?
விளக்கைப் படைத்தவன் கடவுளென்ருல்—அவன்
இருளையும் ஏன் படைத்தான்?

கேள்வியைத் தந்தவன் தூங்குகிருன் ஒரு
பதிலுமில்லாமல்—அதைக்
கேட்டுத் தெரிந்தவர் சென்றுவிட்டார் ஒரு
முடிவும் சொல்லாமல்.

வாழ்க்கை யெல்லாம் வெறும் கேள்விமயம்—இதில்
வளர்ந்தது சமுதாயம்!
வந்ததன் பின்னே கேள்வியிலேயே
வாழ்வதுதான் நியாயம்!

படம்: கானல்நீர்] [இசை: வேணு

★ ★ ★

## முதுமையின் கண்ணீர்!

இன்ப உலகம் என் கண்ணெதிரே இருந்தும்
இளமை எனக்கில்லையே
இளமை எனக்கில்லையே

அன்பினில் விளையாடும் ஆசை நிறைந் திருந்தும்
அழகே எனக்கில்லையே
அழகே எனக்கில்லையே

காலம் நடந்து சென்ற கோடுகளால் மேனி
கடல்அலை போலானதே
கடல்அலை போலானதே

விழியில் குழிவிழுந்து வெளிச்சம் மறைந்த தம்மா
விளையாடும் வயதில்லையே
விளையாடும் வயதில்லையே

போனுல் திரும்பாது வாலிபனே இளமைப்
பொழுதை மறவாதே—இளமைப்
பொழுதை மறவாதே.

படம்: மணிமண்டபம்] [இசை: விசுவநாதன்-இராமமூர்த்தி

## ★ வாழ்க விமலா - சுப்பையா ★

பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் தங்கை திருமதி விமலா பி. எஸ் சி. அவர்கள், ஓய்வு பெற்ற காவல் துறை வட்டார அலுவலர் உயர்திரு. பொன்னம்பலம் அவர்கள் புதல்வர் திரு. பொ. சுப்பையா எம். ஏ. அவர்களை, கடந்த 24-1-60 அன்று வாழ்க்கைத் துணைவராக ஏற்றார். **அறிஞர் அண்ணா**, அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்மண விழாவிற்கு, வெகு பல தோழர்கள் வந்திருந்து வாழ்த்துரைத்தனர்.

"தென்ற"லும் வாழ்த்துகிறது. வாழ்க !வாழ்க !

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

டிரைவரை வெளியே இருக்கும்படி கூறி அனுப்பி வைத்தாள் லில்லி. டிரைவர் அங்கிருந்து மறைந்ததும்...... அக்காளை அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றுள் அல்லி.

......'அக்கா! மயங்கியிருக்கும் அந்த ஆள் வேறு யாருமல்ல... ஒரு வாரத்துக்கு முன்பு நம்மிடம் அகப்பட்டுத் தவித்தாரே அதே சேகர்தான்."

"ஓ, அந்த ஆளா...!"

அப்போது......மயக்கம் தெளிந்து, கட்டிலிலே படுத்திருந்த சேகர், உள்ளே சற்று முன்னே நடந்த பேச்சையும் கேட்கத் தவறி விடவில்லை. அந்த மாடியை அவனிருந்த இடத்திலிருந்த சுற்றிப்பார்த்ததும் அவனது இதயம் பயத்தால் வேகமாக அடித்துக்கொண்டது! மீண்டும் சூதுச்சுந்தரிகளின் கோட்டத்துக்குள்ளே சிக்கிக் கொண்டோமே யென்று வேதனையடைந்தான். தாழ்ந்திருந்த அவனது பார்வையை உயர்த்தியபோது...... எதிரே மேசை தெரிந்தது. அதன் மேலே அழகிய கைப்பை இருந்தது. அவசரமாக அதை எடுத்துத் திறந்து பார்த்தான். உள்ளே.........

புகைப்படமும், அதன் நெகடிவும் இருந்தது. புகைப்படத்தை உற்றுப் பார்த்தான் சேகர். அங்கே... அவனது நன்பன் குமார் தெரிந்தான்; அவனுக்குப் பக்கத்திலே—மிகமிகநெருங்கி—அல்லி அமர்ந்திருந்தாள் சோபாவிலே! காட்சியைப் படத்திலே பார்த்த சேகரின் நெஞ்சு கொதித்தது. 'குமாரையும் பழிவாங்கத் துவங்கி விட்டார்களா இந்த வஞ்சகக் கழுகுகள் ? நான் மோசம் போனது போதாதா ? இந்தக் கோமளவல்லிகளின் கொட்டத்தை இனி அடக்காமலிருக்கமுடியாது. என்ன ஆனாலும் பார்த்துவிடுவது...'என்ற முடிவுக்கு வந்த சேகர் புகைப் படத்தையும், நெகடிவையும் கால் சட்டைப் பைக்குள்ளே எடுத்து வைத்து மறைத்துக் கொண்டான். கைப்பையை முன்பிருந்த மேசையிலேயே வைத்துவிட்டு...கட்டிலிலே மெதுவாகப் புரண்டு கொடுத்தான்.

கைக்கெடியாரத்தைப் பார்த்துக் கொண்டே லில்லி கட்டிலருகே வந்தாள். சேகர் அப்போதுதான் கண் விழித்துப் பார்ப்பதுபோல அந்த நளின சுந்தரிகளின் முன்னே நடித்தான். அவன் அமைதியாக அல்லியைப் பார்த்தான்.

'பார்த்து வந்திருக்கக்கூடாதா, பாதையில் ? கொஞ்சம் டிரைவர் கவனப் பிசகாக வந்திருந்தால்... இந்நேரம் எப்படி ஆகிப் போயிருக்கும் ?'

...அல்லி அழகாகப் பேசினுள். சேகரைத் தெரியாதவர்களைப்போலவே நடந்துகொண்டார்கள் அவர்கள். அல்லியின் இடது கை விரலிலே கோர்த்திருந்த பச்சை மோதிரத்தை அர்த்தத்தோடு பார்த்தான் சேகர். அதே அர்த்தத்தை அல்லியும் தெரிந்துகொண்டதுபோல விரல்களை நெளித்து மோதிரத்தை மறைத்துக் கொண்டாள். ஆனாலும் அந்தப் பச்சை மோதிரம்அவன் வஞ்சிக்கப்பட்ட 'கதை'யைக் கூறிக்கொண்டிருந்தது.

'லேசான அதிர்ச்சி. மயங்கிவிட்டேன் அவ்வளவுதான். உங்களின் உதவிக்கு ரொம்பவும் நன்றி. வருகிறேன் நான்!'

...எழுந்து வெளியே நடந்தான் சேகர். விரைவிலே மயக்கந்தெளிந்து அவன் வெளியே சென்றதைக் குறித்து லில்லி மகிழ்ச்சியடைந்தாள். வாசல் வரை சென்று இருவரும் வனுப்பி வைத்தனர். தலை தாழ்த்தி வெளியே சென்றுகொண்டிருந்த சேகரை 'அப்பாவி'யாக நினைத்து, இதயத்துக்குள்ளே சிரித்துக் கொண்டாள் அல்லி. அல்லியின்—தோளிலே கையைப் புதைத்து புறப்படும்படி துரிதப் படுத்தினுள் லில்லி.

...'இதைப்போல எவ்வளவோ தொல்லைகளை இனிச் சந்திக்கவேண்டும். அதிலே ஒரு துளி இது...புறப்படு அல்லி' என்று கூறிக் கொண்டே காரினுள்ளே குதித்து அமர்ந்தாள்.

'டிரைவர்... இன்னும் பத்தே நிமிடங்களில் வேதநாயகத்தின் பங்களாவுக்குப் போய்ச் சேர வேண்டும். ஆனல் எச்சரிக்கையோடு பாதையை கவனித்தே போ.'

...என்ற லில்லியின் அதிகாரக் குரலைக் கேட்ட டிரைவர் புன்சிரிப்போடு காரைக் கிளப்பினுன்.

★

வேத நாயகத்தின் பங்களாவின் 'டாக்ஸி' நின்றதும். வேலைக்கார சோமு ஓடோடி வந்து பங்களாக்கதவைத் திறந்தான். லில்லி கைக்கெடியாரத்தைப் ப்ார்த்தாள். பத்தாகி ஐந்து நிமிடங்களாகியிருந்தது.

'தந்தி கிடைத்தது... வேதநாயகம் இந்நேரம் புறப்பட்டிருப்பார். நாம் உள்ளே பேசிக்கொண்டிருக்கும் கொஞ்ச நேரத்திலேயே அவர் வந்தாலும் வந்துவிடலாம். கவனம்! கவனம்! நான் கோபமாக யிருந்தால் நீயும் கொதிப்படைய வேண்டும். நான் சிரித்தால் நீயும் சிரிக்கவேண்டும். தவறிவிடாதே! கைப்பையை எடுத்து வந்திருக்கிருயல்லவா ?'

...என்று மெதுவாக அல்லியின் காதருகே கேட்டாள் லில்லி. தலையை அசைத்துக் கொண்டே, கைப்பையை லில்லியின் முகத்திற்கு முன்னே நீட்டி ஆட்டிக்காட்டினுள் அல்லி. பங்களாவினுள்ளே கார் நிற்குமிடத்திலே டாக்சி நின்றது. டாக்சியிலிருந்து இறங்கிக்கொண்டே மாடியை நிமிர்ந்து பார்த்தாள் லில்லி. மாடி அறையிலே வெளிச்சமில்லை. அறைக்கதவும் பூட்டப் பட்டிருந்தது. அவளுக்குப் பின்னே வந்து நின்ற சோமுவிடம் "சின்ன முதலாளி இருக்கிருரல்லவா ?" என்று கேட்டாள்.

"அதோ கீழ் அறையிலிருக்கிருர். அவரை நீங்கள் பார்க்க வேண்டுமா ?"

சோமுவின் பதிலைக் கேட்டுக் கொண்டே அல்லியும், லில்லியும் முன்னே நடந்து போய்க்கொண்டிருந்தனர். முன்னே சென்று தெரிவிப்பதாகக் கூறினுன் சோமு. 'நாங்களே போய்ப் பார்த்துக்கொள்ளுகிருே'மென்று கூறிவிட்டு அந்த அறைப் பக்கமாக நடந்தனர். அறையினுள்ளே...

குமார் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். அல்லியும், லில்லியும் உள்ளே வருவதைக் கண்டதும் திடுக்கிட்டு கையிலிருந்த புத்தகத்தை மூடினுன்.

..."யாரது...நீங்களா ?"

ஆச்சரியத்தோடு கேட்டான் அவன்.

"ஆமாம் நாங்களேதான். ஏன் அவ்வளவு பயம் சின்ன முதலாளிக்கு எங்களைக் கண்டால் !"

பேசிக்கொண்டே அங்கிருந்த பெரிய சோபாவிலே லில்லி அமர்ந்தாள்.

"நீங்கள் வந்த காரணம் தெரியவில்லையே ? இந்த நேரத்திலே நீங்கள் இங்கிருப்பதை அவ்வளவாக நான் விரும்பவில்லை"

...குமார் சற்று பயத்துடனேயே பேசினுன்.

"ஆனல்......அந்த விருப்பம் அல்லிக்கு இருக்கிறதே என்ன செய்வது ?"

லில்லி பேச்சுக்குத் தலையசைப்பது போல நெளிந்தாள்-துவண்டாள்அல்லி.

"அல்லியின் விருப்பமா ?"

...அல்லி குமாரினருகே நெருங்கி வந்தாள்.

"கைவிடமாட்டேன்-கண் கலங்காதேயென்று கூறினீர்களே. இப்போது எல்லாம் பழைய கதையாகிவிட்டதா ? பணம் படைத்த உங்களிடம் நல்ல குணமிருக்குமென்று நம்பித்தான் உறவாடினேன். வாட வைத்துவிட்டீர்களே...வாழ வைக்க வேண்டியவரல்லவா நீங்கள் ? குமார்... நீங்களுமா குறுக்கு வழியைத் தேடிவிட்டீர்கள் !"

...கண்களைக் கசக்கிக்கொண்டாள் அல்லி.

"என்ன குறுக்கு வழியைத் தேடிவிட்டேனு... நீங்கள் பேசுவது புரியவில்லையே ?"

"பட்டு ரோஜா என்று புகழ்ந்தீர்களே ! இப்போது கெட்டுவிட்டதே என் வாழ்வு! மோசம் போனேன் குமார். நயவஞ்சக நரியை, நல்லபாம்பை நம்பிவிட்டேனே நான்..."

...வெளியே காலடி ஓசை கேட்டு எல்லோருமே திரும்பிப் பார்த்தனர்.

"...என்ன மோசம் போனுய் ? யார் வாழ்வு இங்கே கெட்டுவிட்டது ?"

......என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த வேதநாயகம், தந்தி வந்த விபரத்தைக் குமாரிடம் கேட்டார். குமார் எதுவும் புரியாதவனைப் போல, "தந்தி வந்ததா ?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"ஆமாம், அந்தத் தந்தியை சோமுவின் பெயரால் கொடுத்தது நான்தான்" என்று பெருமிதத்தோடு கூறினுள் லில்லி.

"தந்தி கொடுத்தது நீயா ? எதற்காகக் கொடுத்தாய் ? யார் நீங்களெல்லாம் ?"

வேதநாயகம் வேதனை கலந்த நெஞ்சோடு பேசினுர். அவரருகிலே கவலையோடு வந்து நின்ருர் மானிக்கவாசகம்.

"அதையெல்லாம் தெளிவுபடுத்துவதற்குத்தானே உங்களையும் வரவழைத்து நாங்களும் இங்கே வந்திருக்கிருேம். இதோ புது மலரைப்போல காட்சி தருகிருளே இந்த அல்லி எனது தங்கை. செல்லமாக வளர்த்தேன்... இப்போது செந்தேள் கொட்டியது போல துடிதுடித்து நிற்கிருளே, இதற்குக் காரணமானவர் இந்தக் குமார்தான். காதற் கதை பேசி அவளது நெஞ்சிலே படமாகி...இப்போது படமெடுத்தாடும் பாம்பாகியிருக்கிருர் இந்தப் பரம சாது. அன்று சிரித்து நின்றபோது மாலையிடுவது உனக்குத்தான் என்ருர். இன்றே மாலையிடப் பெண் தேடி மதுராந்தகம்வரை தூது அனுப்பியிருக்கிருர். வஞ்சிக்கப்பட்ட எங்களுக்கு நல்ல நீதி வேண்டும். மானம் போன பிறகு என் மாணிக்கம் வாழமுடியுமா இந்த உலகத்தில்..."

ஆவேசமாகப் பேசிய லில்லி நீதி வேண்டுபவளைப்போல வேதநாயகத்தின் முன்னே வந்து நின்ருள்.

"அக்கிரமம். அப்பட்டமான பொய். நான் அல்லியைக் கண்டதுண்டு. ஆனல், அவள் கூறுவதுபோல மையல் கொண்டு, மயங்கி அவளது வாழ்வு கெடும்படி நடந்துகொள்ளவில்லை, நான். மேலும்...அந்த அல்லிக்கு நான் மாலையிட்டு மகிழக் காத்திருந்ததாகவும் கூறுவது வேடிக்கையானதாகத் தானிருக்கிறது"

குமாரியின் பேச்சைக் கேட்ட லில்லி, அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே, "கேளுங்கள்; நன்ருகக் கேளுங்கள். அல்லியைக் கண்டதுண்டாம்...தொடவில்லையாம். இந்தச் சந்திப்புக்கு என்ன பெயரோ நானறியேன். உத்தமமான மகனைப் பெற்றவரே! நீங்களே கேளுங்கள். இந்தச் சத்தியவானிடமிருந்து, அப்போதாவது உண்மை வருகிறதா, பார்ப்போம்" என்று பேசினுள்.

## ★ சேலம் தி. மா. மு. க. மாநாடு ★

21-2-'60 ஞாயிறு காலை 9 மணி முதல் சேலம் அம்மாப்பேட்டை 2-ம் அங்காடித் திடலில் நடைபெறும். தோழர் எம். எஸ். **வெங்கடாசலம்** எம். ஏ. தலைமை ஏற்பார். தோழர் சீர்காழி **சோமசுந்தரம்** பி. ஏ. திறந்து வைப்பார். பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் உள்ளிட்ட பலர் பேசுவர். அனைவரும் வருக.

45-பி, திரு. வி. க. பாதை,<br>சேலம்-3.

இரா. வெங்கடேசன்,<br>வ. கு. தலைவர்.

**நன்றி**

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்கட்கு என் நன்றி!

அன்பன்,
**வாணிதாசன்,**
கடலூர்.

வேதநாயகம் மகனருகே...“குமார் என்ன இதெல்லாம்? சகிக்கமுடியவில்லையே இவர்களின் கூத்து. நடந்ததை இனியாவது மறைக்காமல் சொல்லு” என்று நொந்து போன நெஞ்சோடு பேசினார்.

நான் ஏனப்பா மறைக்கப் போகிறேன்? இந்த இரண்டு பேரும் கை தேர்ந்த வஞ்சகக் கழுகுகள் என்பதை மட்டும் முதலிலே மறந்து விடாதீர்கள். சில நாட்களுக்குமுன்பு நான் காரை எடுத்துக்கொண்டு மெரினாவுக்குப் போயிருந்தேன், மாலைவேளையிலே வழக்கம்போல. அப்போது கடல் காற்றின் சுகத்தை அனுபவித்து விட்டுக் காரருகே நெருங்கிக்கொண்டிருந்தபோது...இந்த இரண்டு சுந்தரிகளும் அங்கே உட்கார்ந்திருந்தனர். இதோ இந்தப் பெரியவள் சாய்ந்து படுத்திருந்தாள்... நான் காரின் மிக அருகில் நெருங்கிய போது. சின்னவள் துடி துடித்துக் கொண்டிருந்தாள். படுத்திருப்பவள் அவள் அக்காளென்றும், அடிக்கடி அவளுக்கு இதுபோல மயக்கம் வருமென்றும் அது அப்போது வந்துவிட்டதெனக்கூறி...எனது உதவியை நாடினாள். ஆபத்தில் உதவ வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டுதான்... இவர்களை எனது காரிலே ஏற்றிச்சென்று இவர்களது வீட்டிலே இறக்கினேன். அந்த வீட்டிற்குசென்ற பிறகுதான் இவர்கள் எப்படிப்பட்டவர்களென்பதைப் புரிந்து கொண்டேன். தாகத்துக்குத் தருவதாகக் கூறிப் ‘பழரசம்’ தந்தார்கள். போதைகலந்த அந்தப்பழரசத்தால் அழிவுபாதைக்கு என்னை இழுக்க நினைத்தனர். நான் கொஞ்சநேரம் மயங்கித்தான் போனேன் ...பிறகு நிலைமையைத் தெளிவாக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறினேன். இதுதானப்பா நடந்த உண்மை. இதைவைத்துக் கொண்டு ஏதோ நாடகமாடி ஏமாற்றப்பார்க்கிறார்கள். நம்பி விடாதீர்கள்.”

......குமார் பேசி முடிந்ததும் லில்லியின் பக்கந் திரும்பி, “உண்மை எதுவோ அதைக் கூறினால்தான் நீங்கள் தப்பிக்க முடியும். இல்லையென்றால் ......” என்று பேசிய வேதநாயகத்தின் பார்வை அங்கிருந்த ‘போன்’ மீது நிலைத்துப் பதிந்தது.

“எது உண்மை? தயவு செய்து இங்கே கொஞ்சம் பாருங்கள்” என்று கூறிக்கொண்டே அல்லியை அருகே அழைத்து, “இந்த அல்லிக் கொடியும் இப்போது இதைக் கிள்ளியெறியத் திட்டமிடும் குமாரும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப் படங்கள் ஏராளமுண்டு எங்களிடம்... அவற்றிலே ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் பார்த்த பிறகாவது...உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்று பேசிய லில்லி அல்லியிடமிருந்த கைப்பையை வாங்கித் திறந்தாள். பையிலிருந்து ஏதேதோ காகிதங்கள் வந்தன. ஆனால்...அந்தப் படம் மட்டும் வரவேயில்லை. லில்லி அவளறிந்த வாழ்க்கையிலேயே முதல் முறையாகத் திடுக்கிட்டாள். அல்லி பதறினாள். வஞ்சிக்க வந்த அவர்கள் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்தனர்.

“எங்கே அந்தப் புகைப்படம்?”

...இடியெனக் குரலை முழக்கினார் வேதநாயகம். குமார் பெரிதாகச் சிரித்தான். அல்லி அழுதுகொண்டிருந்தாள், எரித்துவிடுவதுபோல அவனையே பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர லில்லியால் எதுவுமே பேச முடியவில்லை. அல்லியும், லில்லியும் பின்னே நகர்ந்தனர்.

“...அவ்வளவு சுலபமாகவா நீங்கள் தப்பிவிடமுடியும்”

என்று கூறிக்கொண்டே சேகர், இன்ஸ்பெக்டரும் போலீசாரும் உடன்வர உள்ளே நுழைந்தான். சேகரைக் கண்டதும் நிலைமையைத் தெரிந்து கொண்டாள் லில்லி. தொடர்ந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் அவளிடமிருக்க வேண்டிய அந்தப் படமிருந்தது. அதை வைத்துக்கொண்டு குமார், சேகர் ஆகியோரின் சாட்சியங்களோடு விசாரித்தார் இன்ஸ்பெக்டர், தப்பமுடியாத நிலை பிறந்ததும் தலை தாழ்த்தி ஒப்புக்கொண்டாள் லில்லி. அக்காளைக் கட்டிக்கொண்டு அழுதாள் அல்லி. இன்ஸ்பெக்டர் அந்த இரண்டு சுந்தரிகளையும் போலீசார் தொடர்ந்து வர வெளியே அழைத்துச் சென்றார். அப்போது அறைவாசலைக் கடப்பதற்கு முன்பு லில்லி திரும்பிப் பார்த்து...... “மிஸ்டர் வேதநாயகம். இந்த லில்லி ஒரு காலத்திலே உங்கள் மில்லின் கூலி. மில்லிலே உங்களால் என் திருட்டு கண்டு பிடிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டேன். அன்றிலிருந்து உங்களைப் பழி வாங்கத் துடித்தேன், ஆனால், தோல்வியடைந்ததோ நான்தான் மிஸ்டர் குமார், சேகர்...... உங்களுக்கும் எனது வணக்கம். வருகிறேன்” என்று கூறிவிட்டுப் பெருமூச்சோடு நடந்தாள்.

வேதநாயகம் திகைத்துப் போய் நின்றார். மாணிக்கவாசகம் வாய்பிளந்து சிரித்துக் கொண்டே வேதாயகத்தின் தோளைத்தட்டினார். சேகர் ......... அந்த லில்லியும் அல்லியும் முன்பொரு சமயம் தன்னை ஆட்டிவைத்த விபரத்தையும், அதற்கு ஈடுகட்ட தனது பச்சை மோதிரத்தை இழந்த கதையையும் கூறி ...... அன்று நடந்த நிகழ்ச்சியையும் விளக்கி வைத்தான், மனங்காத்த தோழனை மனங்குளிரச் சென்று கட்டியணைத்து மகிழ்ந்தான் குமார். ★

**திருத்தம்**

கடந்த இதழ் 4-ம் பக்கத்தில் “பிறப்பு” எனும் தலைப்பிட்டு வந்திருக்கும் குறிப்பை இப்படித் திருத்தி வாசிக்கவும்:

“காரிமங்கலம் தோழர் எஸ். ஆறுமுகம் துணைவியார் மீனாட்சி அம்மையார் ஒரு பெண் மகவுக்குத் தாயானார், 18-1-60 அன்று.”

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

திருமங்கலத்தாரின் தீவட்டித் திருப்பணியை திடமனதுடன் மேற்கொண்டுள்ளார்! அந்தத் திருந்தாத உள்ளம் படைத்தவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், திருப்பணி புரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தீர்த்துக்கட்ட வந்திருக்கும் தீரனே உங்கள் செங்கல்வராயன் - உங்களிலே பலர் பெற்றிராத பெற்றுக் கொள்ளமுடியாத பெருமைகளை வைத்திருக்கும் அவர்-செங்கற்பட்டு மாநாட்டிலே சொன்ன அறிவுரைகளை எண்ணிப்பாருங்கள்! “திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதும் ஏசுவதும் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் தணியாத ஆவல் என்றால் அது அரசியல் அநாகரிகமாகும்; இந்தப் போக்கு வேண்டாம்” என்ற அந்தப் பொன்மொழிகளை எண்ணிப் பார்த்துச் செயல்படுங்கள்! தாயகத்திற்கு செய்துவரும் துரோகச் செயல்களை இனியேனும் ஒதுக்கி விட்டுத் தேசியத்தின் பழம் பெருமையைக் காத்திடுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் தேசியச் சிப்பாய்களின் எதிர்ப்பினைக் கண்டு ஏக்கப்படவில்லை. இருந்தாலும் டாக்டர் சுப்பராயனைப் போன்ற சில நல்ல உள்ளங்கள்கூட தீவட்டி வேலையில் தங்கள் சிந்தனையைத் தருகின்றனவே என்பதற்காகத்தான் கடந்தகாலக்கணக்கைத் தருகிறோம். நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னுடைய ஆசையை நிறைவேற்றி வைத்த நேருவுக்கும்-நேரு சர்க்காருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் அவரும் முன்னேற்றக் கழகத்தைப் பழித்துப் பேசவேண்டிய கட்டாயத்துக்கு இழுத்துச் செல்லப் பட்டிருக்கிறார்! இந்தோனசியாவில் இந்தியத் தூதராக இருந்தபோது கூட, தில்லிப் பெரியவாகளுக்குக் கட்டியங் கூறுபவராகத்தான் இருந்தார். அவருக்குள்ள அரசியலறிவு அவரை இந்த மாநிலத்தின் முதல்வராக்கியது நீதிக்கட்சியின் ஆட்சியிலே. இடைக்காலத்து அரசியலிலே அவர் எங்கெங்கோ உருண்டு விழுந்துவிட்டார்! ஓ பி. இராமசாமியாரின் அமைச்சரவையிலே அவர் வகித்த போலீசு அமைச்சர் பதவியும், அதனை இழந்த போது ஏற்பட்ட மனக்குழப்பமும், முதல் பொதுத் தேர்தலில் சாதாரணத் தொண்டராக விளங்கிய தோழர் பேபியிடம் தோற்றதும், இப்போதைய அமைச்சர் பதவியினால்தான் மறையக் கூடியனவாகும்! மந்திரி பதவி அவரின் மனக் கவலைக்கு மருந்தாக இருந்தால் நமக்குக் கவலையில்லை; அனுபவித்துக் கொள்வது அவருடைய உரிமை. ஆனால் சென்னை சர்க்காரிலேயிருக்கும் மைனர் மந்திரிகளைப்போல தரக்குறைவான வார்த்தைகளை எந்த வகையான சபலத்தைக் கொண்டும் பயன்படுத்திவிட்டுப் பங்கப்பட வேண்டாமென நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்! கழகத்தின் அரசியல் வளர்ச்சியை இங்கே அவர் அறிந்து வைத்திருக்கிறார். கழகத்துடன் மோதுவது தவறான காரியம் என்ற கருத்திலேதான் அவர் தமிழ்நாட்டுக் காங்கிரசை ஒரு தீவட்டியின் கரத்திலே ஒப்படைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமலே புறப்பட்டுச் சென்றார்! அந்தத் திசையை மீண்டும் திரும்பிப் பார்க்கட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பற்றி தேசியத் திருச்சபையிலே உள்ளவர்களின் களளத்தனக் கணக்கீடுகள் அழிவுப் பாதையை நோக்கி விரைந்து செல்லக்கூடாதென்ற நல்ல எண்ணத்துடன்தான் சில செய்திகளையும் அவைகளைத் தாங்கி நிற்கும் மனிதர்களையும் அவர்களுக்குக் காட்டுகிறோம். தேசீயத்தின் பெயராலே பேனைப்பிடிக்கும் பெரிய மனிதர்களும் பாரத மாதாவின் பாதுகாவலர்களும் படித்துத் தெரியவேண்டிய பல செய்திகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் தேய்ந்த செருப்பைக் கடிக்கும் சிறப்பான, பொறுப்பான பணியிலே தங்களின் பொன்னான நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். சொக்கலிங்கம் போன்ற காமராசர்களின் அடியாட்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் தெரியவில்லையெனில் முறையாகத் தமிழ் கற்ற பெரும்புலவர்களிடம் சிறிதுகாலம் பாடம் கேட்டுத் தங்களைப் பண்படுத்திக்கொள்வது நல்லதாகும்! வேறொரு வகையில் எண்ணிப் பார்த்தால் இவர்களை நல்லவர்கள் ஆக்குகிறார்கள், ஏசுவதிலே வல்லவர்களான கலாச்சாரக் கலகப் படைவீராகள்! இந்தியத் தமிழர்களான இந்த இரட்டைப்பிறவிகளுக்குத்தற்போது கலாச்சாரமும் தெரியவில்லை; அரசியிலும் புரியவில்லை! அகில இந்தியா உறவு முறையாம் - ஆனால் மதுரையிலே மட்டும் வடக்கு வட்டாரம்-தெற்குவட்டாரம் வைத்துக்கொள்வார்களாம்; வடநாடு தென்னாடு மட்டும் கூடாதாம்! உறவுக்கு இமயம்; உரிமைக்கு வேங்கடம்-இது அரசியலில்! உடமைக்கு ஒருவன்-உள்ளன்புக்கு வேறொருவன்-இது சமுதாயத்தில்! இந்த இரண்டு ரகத்திற்கும் வேறுபாடில்லை என்று நீங்கள் சொன்னால் நான் மறுக்கப்போவதில்லை! திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய கலாச்சாரங்களின் கணிப்பு இந்தத் தன்மைக்கும் தாழ்ந்ததாகும்! இவர்களைப் பற்றி எழுதினால் வேண்டாம் என்று தடுத்து நிறுத்தும் கழகத் தோழர்களை நிறையச் சந்தித்துவிட்டேன். ஆனால் நம்மவர் ஒருவர் சொன்னது போல அவர்கள் முள் இல்லாத கடியாரங்கள்! ஓசையிருந்தாலும் ஓட்டம் இருக்காது! ‘மெசின்’ இல்லாத கடியாரம என்றுகூடச் சொல்லலாம்! ஆனால் அந்தத் தலைவருக்குக் கொஞ்சம் அவகாசம் தருவோம், திருந்திக்கொள்ள! இதர செய்திகளைப் பிறகு பேசுவோம்!

—கூடலரசன்.

**பிறப்பு**

*கடந்த 1-1-60 அன்று காரைக்குடி திரு. **தேனப்பன்** அவர்கள் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார் என்ற சேதியைத் தெரிவிக்க மகிழ்கிறோம்.*

★

*தோழர் வே. சௌந்தரராசன் அவர்கள் 23-1-60 அன்றிரவு ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார் என்ற செய்தியறிவிக்க மகிழ்கிறோம்.*

விற்பனையாகின்றன
**அலமேலு நிலையத்தாரின் சுவடிகள்:**
பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரையார்
எழுதிய
**வாழ்க!**
**வெற்றித் திருநகர்!**
விற்பனை உரிமை:
**பாரி நிலையம்**
சென்னை-1.




**தமிழடியான்,**
**வேலாயுதம்பாளையம்.**

சிலைவிலங்கு நீள்புருவஞ்
சென்றேசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று
முனிவாள்-மலைவிலங்கு
தார்மாலை மார்ப
தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.

மேற்கண்ட நேரிசை வெண்பாவுக்கு உரியபொருள் யாது ?

'தன் கொழுநனை ஆர்வமுற அணைக்கும் சமயத்தில் தன் மார் பகங்கள் கணவன் மார்புடன் முற்றிலும் பொருந்தாமல் சற்றே விலகிவிட்டனவென்று எண்ணி அவற்றை நோக்கி வில் ஒத்த புருவங்களை வளைத்துக் கோபத்துடன் நோக்குவாள் (தலைவி). மாலைகளை அணிந்த தலைவனே! அத்தகையவள் ஆவலைத் தூண்டும் கார்கால மாலைப்போது வந்துறும் சமயம் நீ இல்லாத தனிமையைப் பொறுப்பாள் என்று நினைக்கிருயா ?' என்பது வெண்பாவின் பொருள்.

★

**இரா. வடிவேலன்,**
**பேரோடு, (ஈரோடு).**

"வெண்பா முதலா
நால்வகைப் பாவும்
எஞ்சா நால்வகை
வருணம் போல..."

என்ற தண்டியலங்காரச் சூத்திரத்தில் வெண்பா அந்தணருக்கும், ஆசிரியப்பா க்ஷத்திரியர்களுக்கும், கலிப்பா வைசியர்களுக்கும், வஞ்சிப்பா சூத்திரர்களுக்கும் என்று பாகுபாடு செய்யப் பட்டுள்ளதே, இது நந்தம் செந்தமிழ்ப் பண்புக்கு ஏற்றதா ? இதே போன்று உரைக்கும் கருத்துடைய சூத்திரம் ஒன்று தொல்காப்பியத்தில் உள்ளதாமே ? அது எது ? இப்பாகுபாட்டைக் குறித்துத் தங்கள் எண்ணம் என்ன ?

காட்டிய சூத்திரம் தமிழ்ப் பண்பின் மீது வருணப் பண்டைப் புகுத்தத் தொடங்கியவர்கள் கைவரிசை. அது பழந் தமிழ்ப் பண்பு மன்று; புதுத் தமிழ்ப்பண்பு மன்று; அறிவுடைய எந்த மனித இனப் பண்பு மன்று.

தொல்காப்பியத்தில் இது போன்ற சூத்திரம் இருக்கமுடியாது. அங்ஙனம் கூறுவது காணும் கண்ணின் கோளாருகும். இருப்பின் எடுத்துக் காட்டலாமே !

பழய ஏடுகளுக்கு மனம்போலப் பொருள் எழுதிவிட்ட காலம் ஒன்று உண்டு. ஆனல் நல்ல காலமாகத் தொல்காப்பியம் அந்த நிலை முழுதும் அடையவில்லை. காலக் கோளாருல் உரைகளில் குறைபாடுகள் உண்டு- அவ்வளவே ! அத்துடன் இன்றைய மேலையுலகின் புத்தொளி ஆராய்ச்சித் திறம் குப்பை நீக்கிக் கோமேதகங்களைக் கண்டுணர உதவி வருகிறது.

★

**அன்பு. எழில்மன்னன்,**
**வேளாணி.**

அகம், புறம், நற்றிணை, ஐங்குறு நூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இருக்கும் பாரதம் பாடிய பெருந்தேவனுரின் கடவுள் வாழ்த்துப் பாடல் இடைச்செருகல் தானே ?

நமக்குப் பிடிக்காததை இடைச் செருகல் என்று கூறுவது ஆராய்ச்சி முறையாகாது. பிடிக்காததைப் பிடிக்காதது என்று கூறமுடியாத போதல்லவா அம்முயற்சி வேண்டும் ?

சங்கப் பாடல்களிலேயே அழகுணர்ச்சி மிக்க பாடல்கள் இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தாம் !

★

**நெல்லைக்கபிலன், சென்னை-5.**

தொல்காப்பியரின் இலக்கணத்திற்கும் பவணந்தியின் "நன்னூல்" என்ற இலக்கணத்திற்கும் மாறுபாடுகள் உண்டா? அதன் விளைவாகத் தொல் காலத்தில் வழங்கி வந்த இலக்கண விதிகள் பவணந்தியின் காலத்தில் விடப்பட்டு வகுக்கப்பட்டுள்ளனவா ? விளக்கம் தேவை ?

இங்நிலையில் வேறுபாடுகள் வெறும் கருத்து வேறுபாடு அன்று- காலப்பண்பு நாகரிக மாறுபாடுகள்.

தொல்காப்பியத்தின் வழி வந்த நிழல் சமஸ்கிருதப் பாணினீயம். அதன் நிழல் நன்னூல். மேனுட்டினர் நன்னூலைப் போற்றவில்லை- பாணினீயத்தை நெடுங் காலம் போற்றிப் பாராட்டியுள்ளனர். இப்போதுதான், அது நிழல், மூல ஒளி தொல்காப்பியம் என்று கண்டு, இன்றைய மேலை நாகரிகத்தையும் தாண்டிய அறிவார்ந்த பண்டைத் திராவிட ஒளி அது என்று காண, கண்டு புத்திறம்பூது கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

நன்னூலில் மாறுபாடுகள் வேண்டுமென்றுசெய்யப்படவில்லை. தெரியாக் காலத்தில், பிற மொழி மயக்கமும் சிறிது செயற்பட, அறியாமையால் மாறுதல்கள் எழுந்தன.

★

**இரவணை. கலைமான்,**
**சென்னை-14.**

தலை - இடை - கடைச் சங்கங்கள் வைத்து, தமிழ் மொழியை, வளர்த்தவர்கள், ஏன் 'சங்கம்' என்ற வேற்று மொழிச் சொல்லைக் கையாண்டார்கள் ?

'சங்கம்' வேற்று மொழிச் சொல் என்பதற்கு என்ன ஆதாரம் ?

இச்சொல் சமஸ்கிருதத்தில் உண்டு-மிகப் பழங்காலச் சமஸ்கிருதத்தில் அல்ல. அதற்கு ஆரிய வேர்ச் சொல்லும் கிடையாது.

அது தமிழ்ச் சொல். சங்கம் முழுமை, குழு. அங்கம் ஒன்று, ஓர் உறுப்பு. சமஸ்கிருதத்தில் இந்த அரும் பண்பு கிடையாது.

## "கழகம்" சூதாடுமிடமா ?
## வள்ளுவன் கூறியது தவரு ?

—இவற்றிற்குப்

**பன்மொழிப் புலவர் அளிக்கும் விடைகள் அடுத்த இதழில்.**

குறைந்தது ஆயிர ஆண்டுகள் இரண்டுஇலக்கணத்துக்குமிடையே உண்டு. தொல்காப்பியத்துக்கு உரை யெழுதியவர்களிலேயே சிலர் -கட்டாயமாக இளம்பூரணர்-நன்னூலுக்கு முற்பட்டவர். தொல்காப்பியத்தின் பொருள் மரபு முற்றிலும் மறக்கப்பட்ட பின் தம் காலத்திலறியப்பட்டவற்றை, அறியப்பட்ட அளவில்தான் உரையாசிரியர்கள் விளக்கினர்.

நன்னூல் தொல்காப்பியத்திலிருந்து வேறுபட்டது என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனல் வேறுபாடு மூவகை.

முதலாவது கால வேறுபாடு.

இரண்டாவது தொல்காப்பியர் காலத் தமிழ் எவ்வளவோ மாறுபட்டுவிட்டது. அவர் இலக்கணம் குறித்த பொருள் பல இடங்களில் ஊகிக்கப்பட வேண்டியதாயிற்று.

மூன்ருவது தொல்காப்பியம் எவ்வளவு பழமையானது, சமஸ்கிருதம் எவ்வளவு புதுமையானது என்பதும் மறக்கப்பட்டு, பின்னது பழமை மிக்கது, சமத்துவம் உடையது மட்டுமன்று, மேம்பட்டது, மூல ஆதாரமானது என்று சில பலர் படிப்படியாக நம்பத் தொடங்கிய காலத்தில் முதலில் எழுந்த இலக்கணம் நன்னூல். இந்த நம்பிக்கை வளர வளர வேறு இலக்கணங்கள் எழுதப்பட்டனவாயினும் தொல்காப்பியத்துக்குப் பின் மதிப்புப் பெற்ற இலக்கணம் நன்னூலே.

**கமலதாசன், தார்க்காடு.**

உயர்திணையில் உள்ளது போன்று அஃறிணையிலும் ஆண்பாற் பெண்பாற் பகுப்புள்ளதேனும், அஃது ஆண்பால், பெண்பால் எனப் பிரித்துக் கூறப்படாது ஒன்றன்பாலாகவே கூறப்படுகின்றதே! அஃது ஏன் ?

பேசும் உயிர், மொழிக்குரிய உயிர் மனிதன் மட்டுமே. மற்ற உயிர்களுக்கு இதனல் மூவிடங்களில் படர்க்கை இடக்குறிப்பு மட்டுமே உண்டு. இந்நிலை உயிரில்லாப் பொருள்களுடன் ஒத்தது. ஆகவே உயிரற்றன, உயிருடையவற்றுள் மனிதன் நீங்கிய அஃறிணையாக, ஆனல் ஒன்று பல என்ற வேற்றுமை மட்டும் கொண்டு தமிழனல் வகுக்கப்பட்டன.

மேலும் ஆண் பெண் வேறுபாடு எல்லா உயிர்களுக்கும் கிடையாது. உயிரின வளர்ச்சியில் தொடக்கப் படிகளில்பாலின்மை, ஒரே பாலுடைமை, இருபால் முப்பால் குளறு படிகள் கடந்து உயர் உயிரினங்களில் மட்டுமே தெளிவான ஆண் பெண் பாகுபாடு உண்டு. அதனடிப் படையாகக் குடும்பம், சமுதாயம், இனம் என்ற முப்படிகளும் வகுத்துக் கொண்டவன் மனிதனே- மனிதனில் கூட நாகரிக மனிதன்- முழுநிறை நாகரிக உச்சியெட்டிய தமிழன் மட்டுமே.

உலக மொழிகளில் பால்கள் பல வகைக் குளறுபடி நிலையில்தான் இன்னும் இருக்கின்றன. ஆனல் எல்லா நாகரிக மொழிகளும்- சிறப்பாக ஆங்கில மொழி-தமிழைப் பின்பற்றி வருகிறது என்பதைக் கேள்வி கேட்பவர்கள் காணலாம், கண்டு உலகுக்கு மெல்ல உணர்த்தலாம்.

16-ம் நூற்ருண்டு முதல்தான் ஆங்கிலத்தில் இக்நிலை ஏற்பட்டு வருகிறது.

மற்றமொழிகளும் மெல்லமெல்ல இக்நிலை பின்பற்றி வருகின்றன.

இருபதாம் நூற்ருண்டில் தம்மை யறியாமல் விலங்கு பறவைகளை அது (It) என்று குறிக்கும் தலை சிறந்த எழுத்தாளர்கள் மேல் நாட்டிலேயே பெருகி வருகின்றனர்.

★

**நையட்டி எஸ். எம். ஜோகி,**
**நீலகிரி.**

'கொஞ்சிடும் மங்கை குமரியாளுள்' என்பது பாடல் வரி. 'மங்கை', 'குமரி' இவ்விருச் சொற்களை விளக்குவீர்களா?

பாடகர் யார், என்ன தறுவாயில் எழுதினர் என்பது தெரியவில்லை. ஆனல் அப்படியே பாட்டடி கொண்டு கூறுவதானல், நங்கை மங்கை என்ற சொற்கள் படிப்படியாக மணப்பருவம்நோக்கிவளரும்- மொக்கு வளர்ந்து மொட்டு அரும்பு ஆகும் பருவங்களைக் குறிக்கும். மங்கை கடந்த பருவத்தைப் பழந் தமிழ் ஏடுகள் 'மடந்தை' என்று கூறும். 'குமரி' அம்மடந்தைப் பருவத்தைக் குறிக்கலாம். ஆனல் தனித் தமிழ் வழக்கில் 'குமரி' என்பதும் 'கன்னி' என்பதும் கிட்டத்தட்ட ஒரு பொருட் சொற்கள். கன்னி பொதுவாகத் திருமணமாகாப் பருவத்தையும், குமரி திருமணமாகாப் பருவமட்டுமன்றி நிலையையும் குறிப்பனவாகும்.

★

**குவலயன், குயப்பேட்டை,**
**வேலூர்,**

ஆக்கம் யாரைத் தேடி, எப்படிச் செல்லும் ?

ஊக்கம் உடையவனை நாடி. தானக வழி கேட்டுத் தேடிக் கொண்டு( அதர்வினுய்ச் ) செல்லும்.

மாதர் அடிக்கு எவைகளை நெருஞ்சிப் பழம் என்கிருர் ?

அனிச்சப்பூ இதழும், அன்னத்தின் தூவியும்.

திருக்குறளில் பல இடங்களில் கருத்து வேற்றுமைகள் இருக்கக் காரணம் என்ன ?

அப்படி இல்லை. இருக்க இடமில்லை. காண்பவரிடம் உளள கருத்து முரண்பாடே வேறுபாடாகத் தோற்றக்கூடும்.

இன்பத்துப்பால் முழுமையிலும் வள்ளுவர் ஒரு கருத்தை வலியுறுத்தி இருக்கிருர். அக்கருத்து என்ன ?

கேட்பவர் குறித்தது எதுவோ ?
காதல் கடலினும் பெரிது,
காதலினும் பெரிது பெண்மை,
இது வள்ளுவர் வலியுறுத்தும் முடிவு என்னலாம்.

★

**[மலரில் நூறு ஐயவினுக்களுக்குப் பதிலளிக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனல் இடமின்மையால் மலரில் 54 வினுக்களுக்கு மட்டுமே விடையிறுக்கப்பட்டிருந்தது. மீதியுள்ள வினுக்களுக்கான விடைகளைக் கிழமை இதழ்களில் வெளியிடுகிருேம். நண்பர்கள் பொறுத்தருள்க.**

**மேற்கண்ட விடைகள் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் கருத்துக்கள்.]**

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

மக்காச்சோளம் தொடர்புகொண்ட உற்பத்தி சாலை, ஆமதாபாத்.

இவை ஒவ்வொன்றும் பலலட்சம் மூலதனம் கொண்ட தனித்தனிக் கம்பெனிகளாகும். ஒரு குழுவினர் இதன் நிர்வாகத்தை ஆட்டிப் படைக்கின்றனர்.

இப்படிப்பட்ட சங்கிலிகளும், குழுக்களும் தொழிற்சாலைகளில் மட்டுமில்லை. பாங்கிகளிலும், இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளிலும், பத்திரிகைத் துறையிலும்கூட உள்ளன. பத்திரிகைகளில் இதைக் கண்கூடாகக் காணலாம். இத்துறையில் ஒன்பது சங்கிலிக் கம்பெனிகளும் 119 குழுக்கம்பெனிகளும் இருக்கின்றன. ஒன்பது சங்கிலிக் கம்பெனிகள் இந்த நாட்டில் உள்ள மொத்தப் பத்திரிகைகளில் ஒரு சத விகிதப் பத்திரிகைகளைத் தங்கள் கைக்குள் வைத்திருக்கின்றன; இந்த ஒரு சத விகிதப் பத்திரிகைகளின் மொத்தச் சுற்றுப்படிப்பு (சர்க்குலேஷன்) 17 சத விகிதமாகும். இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, தினமணி கதிர், ஆந்திரப்பிரபா, ஆந்திரப்பிரபா வாரப் பதிப்பு முதலிய பல மொழிப் பத்திரிகைகளை நடத்திவருவது தெரிந்ததே. இப்படிப் பல பத்திரிகைகளை நடத்திவரும் ஒன்பது சங்கிலிகள் பின்வருமாறு (Chain news-papers):

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் தொடர்புள்ள இதழ்கள், டில்லி.

ஆனந்த பஜார் பத்ரிகா (பிரைவேட்) லிமிடெட.

அமிர்த பஜார் பத்ரிகா அண்டு ஜுகெந்தர், கலகத்தா.

சௌராஷ்ட்ரா லிமிடெட்.

பிரதாப் அண்டு வீர் அர்ஜுன் லிமிடெட்.

லோக்சத்தா அண்டு ஜன்சத்தா நாளிதழ்.

ஸ்ரீநர்கேசரி பிரகாஷன் லிமிடெட்.

பென்னெட் கோல்மான் லிமிடெட்

பத்திரிகை உலகில் பத்திரிகைகளைத் தங்கள் கைக்குள் வைத்திருக்கும் 119 குழுக்கள்(Group newspapers) மொத்தப் பத்திரிகைகளில் 5.3 சதவிகிதத்தையும், 20சத விகிதம் சுற்றுப்படிப்பையும் ஆள்கின்றன.

இத்தகைய சங்கிலிக் கம்பெனிகள் இந்தியா முழுவதிலும் தங்களுக்குக் கிளைகளை வைத்திருப்பதோடு கிளை அலுவலகங்களையும் வைத்து வருகின்றன. சுருங்கச் சொன்னால், இந்தியாவின் பொருளாதாரத்தையே அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கின்றனர். இந்தச் சங்கிலி கம்பெனிகளின் வளர்ச்சி, குழுக் கம்பெனிகளின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றத்திற்கு நல்லதல்ல, ஏற்றதல்ல என்பதற்கு நாட்டுமக்களைக் கலக்கிய முந்திரா விவகாரம் ஒன்றே போதும். நாட்டுப்பொருளாதாரம் வளர, கம்பெனிகள் நாடு முழுவதும் பரவலாக அமைய வேண்டும்; அவைகளை நடத்துவோர் ஒருசிலரின் ஏகபோக உரிமையாக அமையக் கூடாது; அல்லது ஒரு குழுவினரின் சொந்த விஷயமாக இருத்தல் கூடாது. பரவலாக இருக்கவேண்டும்; கம்பெனிகளின் நிர்வாகம், பலருக்கும் சொந்தமாக இருத்தல் நல்லது. அதற்காகத்தான் பொதுத் துறையிலும் இத்தகைய கம்பெனிகள் எழவேண்டும் என்று விரும்புகின்றனர் பலர். தனியார் துறையில் பல முக்கியமான கம்பெனிகள் உள்ளன. உதாரணமாக இரும்பு, எஃகு—இவை டாடாவின் ஏகபோக உரிமைகளாக இருக்கின்றன. அதற்காகப் பொதுத்துறையிலும் இத்தகைய ஒரு கம்பெனியைத் துவக்குவது நல்லது என்று பலரும் விரும்புகின்றனர். தனியார் துறையிலுள்ள பல கம்பெனிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன; என்றாலும் அதற்காகச் சங்கிலிக் கம்பெனிகள் அதிகமாவதை அனுமதிக்கக்கூடாது. இனியும் சங்கிலிகள் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பத்திரிகைத் துறையில் பார்த்தால், ஒரு குழுவினரால் நடத்தப்படும் பல மொழிப் பத்திரிகைகள் ஒரே எண்ணத்தை — அவற்றின் அதிபர்களின் சொந்தக் கருத்தைத்தான்—எதிரொலிக்கின்றன. படிக்கின்றவர்களின் கருத்து அவ்வகையிலே உருவாக்கப்படுகிறது. இது குடியாட்சி நெறியின் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.

இத்தகைய சங்கிலிக் கம்பெனிகள் வடநாட்டில்மட்டும்தான் உள்ளன என்று கூறுவதற்கில்லை; தென்னாட்டிலும்கூட உள்ளன. ஆனால் "பணத்தோட்டத்"தில் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், தென்னகத்தில் மிக அதிகமான மூலதனம் கொண்டு நடத்தப்படும் கம்பெனி, வட இந்தியாவில் மிகக் குறைவான மூலதனத்தால் நடத்தப்படும் கம்பெனிக்குக்கூடச் சமமாக இல்லை. என்றாலும், சங்கிலிக் கம்பெனிகள் மேலும் மேலும் வளர விடாமல் பாதுகாப்பது நாட்டுப் பொருளாதாரத்திற்கு மட்டுமல்ல; நாட்டு மக்களுக்கும் நல்லது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை அந்த நாட்டின் மத்திய அமைச்சரவையும், அதற்கு ஆய்வுரை வழங்கும் பொருளாதார நிபுணர்களும் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட சில முதலாளிகள் நிர்ணயிப்பது என்பது தவறானது; தவிர்க்கப்பட வேண்டியது. ஆகவே இத்தகைய சங்கிலிக் கம்பெனிகளின் நிர்வாகத்தையும், போக்கினையும் அரசாங்கம் அவ்வப்போது கண்காணித்து வர வேண்டும்; தவறான பாதையில் அடியெடுத்து வைக்கும்போது தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தயங்குதல் கூடாது. நாட்டுப் பொருளாதாரம் இத்தகைய கம்பெனிகளில் பாழாகாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். முடிந்தால் சங்கிலியை உடைத்தெறியவும் உறுதிகொள்ள வேண்டும்.

—நா. சகந்நாதன் எம். ஏ.

ஜுபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குமின் ஹோட்டல், திண்டுக்கல்ரோடு, மதுரை.

# அழகும் பயனும்

"இலக்கியங்கள் சமுதாயத்திற்குப் பயன்படும் கருவிகளாக இருக்க வேண்டும். அத்தகைய பெற்றி வாய்ந்த இலக்கியங்களே நாட்டுக்குத் தேவை. வீண் பொழுதுபோக்கு முறையில் எழுதப்பட்ட புராண இலக்கியங்கள் ஒதுக்கப்படவேண்டியவை" என்று சில நாட்களுக்கு முன்பு அறிஞர் ஒருவர் இலக்கிய ஏடுகளின் பயனுடைமை பற்றிக் குறிப்பிட்டார். தமிழறிஞர்கள் கூடிப் பேசும் கருத்தரங்கங்களிலும் இலக்கிய ஏடுகளின் பயனுடைமை எதுவாக இருக்கவேண்டுமென்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் எழாமலில்லை. இத்தகைய வேறுபாடு தமிழகத்தில் பல ஆண்டுக் காலமாக நிலவி வந்துள்ளது. "இலக்கியம் மக்களின் ஆழ்ந்தகன்ற அனுபவ நுகர்ச்சிகளை வடித்துக்காட்டுவது" என்பதால் அதன் பயனும் மனித வாழ்க்கை நெறிகளை ஒழுங்குபடுத்தும் முறையில் அமைந்திருக்க வேண்டுமென்பர்.

மேலைய நாட்டிலும் இலக்கியம் எப்பயனை அளிக்க வல்லதாயிருக்க வேண்டும் என்பது பற்றிய கருத்து வேற்றுமை சென்ற நூற்றாண்டுவரை இருந்திருக்கின்றது. ஒரு சாரார் இலக்கியம் எழுந்த நோக்கமே இன்பம் தருவதற்காக என்பார். ஏ. சி. பிராட்லி என்பார், 'இலக்கியங்கள் படிக்கும்போது இன்ப அனுபவத்தைத் தருவனதான்" என்றும் வேறு பொருளையும் பயனையும் தருபவை இரண்டாந்தரமானவை என்றும் வாதிடுகின்றார். அவரது கருத்து 'கலை கலைக்காகவே' என்பதாகும்: "கலைஞன் எப்பொருள்பற்றிக் கூறினாலும் கவலை இல்லை, எவ்வாறு அது கலைப்பிண்டமாக உருவாக்கப் பட்டது என்பதே கவனிக்கவேண்டியது. ஏன் எவ்வாறு என்ற வினாவிற்கே இடமில்லை." — இவ்வாறு, இலக்கியத்தின் முழு நோக்கம் பயில்தொறும் இன்பம் தருவதுதான் என்று வலியுறுத்தினார்கள். இத்தகைய கொள்கையை தமிழகத்தில் சிலர் மிகவும் வலியுறுத்தி வருகிறார்கள்.

வெறும் சொல்லமைப்பிலும், ஓசை நயத்திலும் ஏற்படும் இன்பம் நிலையானதல்லவென்றும், இலக்கியம் என்றும் நின்றிலங்கும் தன்மை பெற்றிருப்பதற்குரிய காரணம் இத்தகைய இன்பநுகர்ச்சிக்காக மட்டுமன்றி, மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றியிருந்து அவர்களை நன்னெறிப் படுத்தும் கருவியாகவும் உள்ளது என்றும் பலர் கூறுகின்றனர். இந்தக் கருத்தே இலக்கிய ஆய்வாளர் பலரால் ஒப்பி வரவேற்கப்படுவதாகும். 'அழியாத உண்மையும் ஆழமும் மிகுதியாகப் பெற்றுத் திகழ்தலே சிறந்த இலக்கியத்தின் தன்மை. வாழ்க்கையின் நன்மைகளை மிகுதிப் படுத்தலே அதன் பயன்களாம்!' என்று கூறப்படுகின்றது.

வில்லியம் டெம்புள் என்னும் மேலை நாட்டறிஞர் கலை எவ்வாறிருக்க வேண்டுமென்பதுபற்றித்தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அவர் கருத்து இலக்கியம் அமையவேண்டிய முறையைத் திண்ணமாகத் தெரிவிக்கின்றது: "கலையில் - கவிதையில் ஆர்வமும் அறிவும் ஒன்று கலக்கின்றன. ஆர்வம் கலைக்குரியது; அறிவு வாழ்வுக்குரியது. ஆர்வம் கதிரவன் ஒளிபோல் வண்ணம் காட்டுகிறது. அறிவு அவ்வண்ணத்திற்கு உருவம் அமைக்கும் பொருண்மைபோல், பொருள்களின் வேறுபாட்டை விளக்குகின்றது." இலக்கியங்களின் பயனுடைமைக்கு அவர் கூறும் விளக்கம் மிகத் தெளிவாக அமைந்திருத்தல் காணலாம். சுருங்கச் சொன்னால் அவை மலர்தரும் பூக்காடுபோல் மணமும் எழிற் கவர்ச்சியும் அளிப்பதுடன், காய்கறிப் பழத்தோட்டங்களைப்போல் இனிய பயனும் நல்குதல் வேண்டும். இன்பம் ஒன்றை மட்டும் தரும் நூல்கள் பல, பல நாடுகளிலும் எழுந்தன. இன்பமும் பயனும் அளிப்பவை சிலவே; ஆனால் இந்தச் சிலவகை நூல்களே மனித சமுதாயத்தில் என்றும் அழியாப் பெட்டகங்களாகப் பாதுகாக்கப் பட்டு, பயில்தொறும் இன்பமும் பயனும் நல்கும் வற்றாச்சுவை பயக்கும் கருவூலங்களாக அமைந்துள்ளன.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த மட்டில், இன்பமும் பயனும் அளிப்பனவே பெரும்பான்மையாகும். சங்க இலக்கியங்கள் நவில்தொறும் கவிச் சுவையும் இலக்கிய இன்பமும் அளிக்கவல்லன; மனித சமுதாயம் அமைந்தொழுகும் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக்காட்டி வீறு கொண்ட நல்ல சமுதாய அமைப்பை ஏற்படுத்துதற்கும் வழிகாட்ட வல்லன. இலக்கியத்தின் பயன் இன்பம் தருவது மட்டுமன்றி, பயனும் அளிக்கவேண்டும் என்ற முடிபே இன்றையதினம் மேலைநாட்டறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். தமிழகத்திலும் இக்கருத்தே வலிவு பெற்றுவருகின்றது.

அல்லாது போலி மயக்கில் உலக மாந்தரை ஆழ்த்துவன இலக்கியங்களில்லை. ஏனெனில் சமுதாயம் செல்ல வேண்டிய இலக்கை இயர்பி இட்டுச் செல்வனதானே இலக்கியங்கள்? செத்தொழிந்த பழமைக்கு 'லாலி' பாடுவனவும், வாழ்கின்ற மக்களுக்குப் படுகுழியைக் காட்டுவனவும் இன்பத்தைக்கூடத் தரத்தான் செய்கின்றன. என்றாலும் என்ன பயன்?

காகிதப் பூவினால் காட்சியின்பம் கிட்டலாம்; நுகர்ச்சி இன்பம் கிடைக்குமோ? காட்சிக்கும் நுகர்ச்சிக்கும் இன்பம் அளிக்காதன காலத்தை எதிர்க்கமுடியாதன.

—ஆ. அதியமான் எம். ஏ.

# செழியன் உலா

இந்த வீராதி வீரரை உங்களுக்குத் தெரியுமா? ஆகா, இவரின் திண்டோளின் வலிமையை என்னென்று சொல்வேன்? இவரால் உடைந்து, தூள் தூளான ஓட்டைச் சட்டிகள் ஆயிரம்! ஆயிரம்! இவரால் கிழித்தெறியப்பட்ட கந்தல் துணிகள் இலட்சம்! இலட்சம்! இவரால் சுட்டெரிக்கப்பட்ட சிகரெட்டுகள் கோடி! கோடி! இன்னும் தெரியவில்லையா இந்தச் செங்கற்பட்டுச் சிங்கத்தை! ஆ, தெரிந்துகொண்டீர்களா, இந்த அரியலூர் அமைச்சரை! பின் எப்படித் தெரியாமல் போகும்? ஒருவேளை காந்தியும் நேருவும் யார் யாரென்று தெரியாமற் போகலாம், உங்கட்கு. ஆனுல் காந்தியாரோ நேருவோ செய்ய முடியாத அற்புதங்களை எல்லாம் செய்து புகழை நிலை நாட்டிக்கொண்ட இந்த அரியலூராரின் அரும்பணிகளும் தீரச் செயல்களும் ஒன்றில்லை; இரண்டில்லை. அன்று, தில்லியில் கொலு வீற்றிருப்பவர்க்குக் குடை பிடித்துக் கொண்டிருந்தார். அரியதோர் "அரியலூர்" திடீரென்று ஏற்படவே, தமிழ் நாட்டிற்குத் திரும்பிவந்து விட்டார். இப்பொது தமிழ்நாட்டில் காமராசருக்கு எதை எதையோ பிடித்துக்கொண்டிருக்கிருர். வேறு எதையுமில்லை; கொடியைத்தான் பிடித்துக்கொண்டிருக்கிருர். நீங்கள் உங்கள் போக்கில், வாலைப் பிடிக்கிருர்; தீவட்டியைப் பிடிக்கிருர் என்றெண்ணிவிடாதீர்கள்! காமராசருக்குக் கொடி பிடித்துக்கொண்டிருக்கும்போதே, திடீர் திடீர் என்று எதை எதையோ பிடித்துக்கொண்டு தொங்கத்தொடங்கிவிடுகிருர். அப்போது காமராசருக்குக்கூடச் சங்கடமாகிவிடுகிறதாம்.

எதிர்க் கட்சிகளெல்லாம் கூடினுல் காங்கிரசைத் தோற்கடித்துவிடலாம் என்று கனவு கண்டதாகவும், அது தூத்துக்குடியில் தூள் தூளாகிவிட்டதாகவும்பேசுகிருர். அரியலூர்அற்புதத்துக்கு சம்பவங்களின் தொகுப்புச் சரிவரத் தெரியாது போலும். எதிர்க் கட்சிகள் முழுவதும் ஒன்று சேராமலே அருப்புக்கோட்டையில் தோல்வியின் வாயில் விழுந்தாரே-அதை மறந்துவிட்டதா அரியலூர் அற்புதம்?

ஆபாசப் பேச்சால் மக்களைக் கெடுத்து வந்ததாம் தி. மு. க.! அட, அற்புதமே! விடிந்தெழுந்தால் அழகான பெண்களைத் தேடித் திரிகின்றது இது; அதாவது காங்கிரசுப் பெண் தொண்டர்களாய் நியமிப்பதற்கு. "தி. மு. க. பருவ மங்கைக்கு அழகில்லை; கவர்ச்சியில்லை!" என்று வேறு பேசிய அத்திருவாயை "டெட்டால்" போட்டுக் கழுவிவிட்டாராம் காமராசர். கல்லுப்பட்டி ஆசிரமத்திஞல் நடந்த வழக்கைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இன்னும் ஆயிரம் ஆபாசங்களைத் ................ப் பொருட்காட்சியும் பிறவும் காட்டிக் கொடுத்துவிட்டன. இவற்றை எல்லாம் மறைக்கத் திருடன் மற்றவனைத் திருடனென்று சொல்லித் தப்பித்துக்கொண்டாற் போல அரியலூராரும் பிறரை ஆபாசக்காரர்கள் என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிருர்.

இனி இவர், கம்பர் சொட்ட எழுதி வைத்த, கவிதைகளைத் தடை செய்வார்! பிள்ளைத் தமிழென்று பாடி "அம்மனையும் அப்பனையும்" ஆடை உரித்துவிட்டிருக்கும் நூல்களைக் கொளுத்துவார்! பெரிய பெரிய புராணங்களென்று, பெண்களைப் பிறந்த மேனியாக்கிவிட்டிருக்கும் ஏடுகளையும் எரிப்பார்! கோவில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் நாகரிகச் சிலைகளையும் நொறுக்குவார்! நம்புங்கள்; இதை நிச்சயமாக நம்புங்கள்.

"தூத்துக்குடியில் வாங்கப்பட்ட வெற்றி, காங்கிரசு மீது மக்களுக்குள்ள நம்பிக்கையைத் தெரிவிப்பதாகும்!" என்பதாக வேறு திருவாய் மலர்ந்தருளியிருக்கிருராம் அவர்.

சரித்திரத்தையே மாற்ற நினைப்பது தவறு. அது "முயலுக்கு மூன்று கொம்புண்டு" என்று மக்கள் நம்பிவிட்டனர் என்பதுபோலத்தெளிவற்றதாகும். தெருவிலே போவோன் வருவோன் பேசினுல் தவறில்லை. தூத்துக்குடியில் தூளான கதையைப் பேசுபவர், அருப்புக்கோட்டையிலும் முதுகளத்தூரிலும் விதைக்கப்பட்ட பணம் பாழானதை மறந்தாரோ? அங்கு, காங்கிரசார் மீது நம்பிக்கையில்லையென்று மக்கள் அளித்த தீர்ப்பை மதித்து நடந்தாரோ?

x x x

"அட அவதாரமே! மச்சாவதாரமே! வராக அவதாரமே! அனுமந்த அவதாரமே! அவசரப்பிண்ட அவதாரமே!" என்றெல்லாம் நம் வாயிலிருந்து வார்த்தைகளை வாங்கிக் கட்டிக்கொள்ள ஆசைப்பட்டிருக்கிறது போலும் கன்னக்கோல். பண்டாரங்களின் பின்னேடும் பரம பண்டாரங்களான ம. பொ. சி. கழகத்தாரின் ஏடு எனப்படும் ஒன்று, "பாவாணர் என்ன கலைமகளின் அவதாரமோ!" என்று எழுதுகிறது. திராவிட மொழி நூல் முனைவர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் "திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லே" என நமது ஏட்டில் எழுதியதைக் கிண்டல் செய்கிறது, அந்த வைக்கோல். வாதத்திறமையற்ற அது, வம்புக்கிழுக்க நினைத்ததோ-என்னவோ? முச்சந்தியில் நின்றுகொண்ட அறுதாலி "அவள் என்ன கற்புக்கரசியோ? அவளுக்கென்ன திறனுண்டோ? என்னைப் போல் அவள் ஆயிரம் பேரின் அன்பைப் பெற்றதுண்டோ?" என்று கத்தினதுபோல, கன்னக்கோலில் பதில் சொல்ல வந்தவர் கதறியிருக்கிருர். "வேலிக்கு ஓணன் சாட்சி" என்பதன் மூலம் வேறு பாவாணரைக் கிண்டல் செய்கிறது. பாவாணர் அவர்கள் தன் கருத்தை யாருடைய தயவையும் நாடிச் சொன்னதில்லை. அதேபோல எந்த லாபத்தையாகிலும் கருதிச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல மறந்ததுமில்லை; பயந்ததுமில்லை. அவரைக் கீழான மொழிகளால் தூற்றும் கன்னக்கோலில் பதில் சொன்ன "ஆளை" எப்படி அழைத்தால் தானென்ன? "கோட்டானே! கரடியே! குரங்கே! வெறிபிடித்த ஞமலியே! தெருவோரத்துப் பிண்டமே!" என்றெல்லாம் பல்லாயிரம் சொற்களைக் கொட்டுவதற்கு நேரமா பிடிக்கும்?

தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்றெழுதிய ராகவையங்கார் என்ற வெறியர் சொன்னதால் திராவிடம் வடசொல்லாகி விடுமா? இன்னும் ஆயிரம் கேட்கத் துடிக்கிறதென்ருலும், அடக்கி வைக்கிறேன். கண்ணியம் கருதி நிறுத்துகிறேன் இத்தோடு. இனிமேலாகிலும் கன்னக்கோல் தமிழறிஞர் பெருமக்களைத்தாக்குவதை நிறுத்தட்டும்!

x x x

திராவிடம் என்ற சொல் ஏழாம் நூற்ருண்டில் தான் வந்ததென்ற (குரக்கு) வாதம் ஒன்றும் கிளம்பியிருக்கிறது. குமரில பட்டன் ஏழாம் நூற்ருண்டில் தான் "திராவிடம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிருனும். எனவே அந்தச் சொல் ஏழாம் நூற்ருண்டுச் சொல்தானும்! இதைச் சொன்னவனை தமிழ்ப்பகை வையாபுரியின் பேரன் என்ருல்தான் என்ன? "தான் ஏதாகிலும் புதிதாய் ஒன்றைச் சொல்லி நிலைநாட்ட வேண்டும்; மதிப்புப் பெற வேண்டும்!" என்ற நோக்கத்தோடு தங்கையை மனைவியென்று கூறக்கிளம்பிய அதிமேதாவிகள் இவை. ள, ழ, ல என எதற்கு மூன்று வேண்டும் எனக்கேட்ட அரியலூர் அளகேசனுடன் பிறந்த இந்தப் பிண்டங்களுக்கொரு வினு!

உங்கள் வாதப்படியே. ஏழாம் நூற்ருண்டு நூல்களில்தான் இந்தச்சொல் பயன் படுத்த' படுகிறதென்று வைத்துக் கொள்வோம். ஆனுல் ஒரு சொல் உருவாவதென்ருல் எத்தனை நாள் பிடித்திருக்கும்?

நீ திடீரெனப் பிறந்து விடவில்லையே! இப்போது உன் கல்லூரியில் படிப்பவர்கள் சூட்டியிருக்கும் செல்லப்பெயர் வேண்டுமானுல் புதிதாகத் தோன்றியதாக இருக்கலாம். ஆனுல் அவர்கள் சூட்டி விட்ட பட்டப்பெயரான மனித இனத்தின் மூதாதை என்பதின் சொற்கள்உருவாக எத்தனை நாட்களாயின? அது கிடக்கட்டும்; நீ பிறந்து வளர்ந்துஇன்று உனக்கென ஒருபெயரை வைத்துத் திரிவதற்கே எத்தனை நாட்களாயின? நீ திடீரெனப் பிறந்துவிடவில்லையே! உன் அப்பனும் ஆத்தாளும் என்ருே ஒரு நாள் கூட, அதன் விளைவாக நீ படிப்படியாக உருவாக எத்தனை நாட்கள் பிடித்தன? பிறந்ததும் நீ இந்த நிலைக்கு வந்துவிட்டாயா? எத்தனையோ நாள் தவழ்ந்து விளையாடி வளர்ந்து பின்தானே இந்த வயதை எட்டிப் பிடித்திருக்கிருய்? ஆனுல் நீ பிறந்தபோதே உன் தந்தையோ, தாயோ உனக்குக் குஞ்சையா என்று பெயர் சூட்டிவிட்டனர்! எனினும் குஞ்சையா என்றவுடனே அடுத்த தெருக்காரன் "அவன் நீதான்!" என்றறிய, நீ பத்து வயதைக் கடக்க வேண்டியிருந்ததே! உன் பெயரை அடுத்த தொகுதிக்காரன் அறியப் பதினைந்து ஆண்டுகள் பிடித்தனவே! அட மூடமே! உன் பெயரை அறிந்து, "நீ என்ன செய்கிருய்?" என வெளியூர்க்காரன் அறிந்துகொள்ள இருபத்தைந்து ஆண்டுகள் தேவைப்பட்டனவே! அட மண்டூகமே! இன்னுமா தலை நீட்டுகிருய், ஏதோ ஒன்று எச்சில் இலைக்குத் தன் தலையை நீட்டியது போல! திராவிடம் என்ற பெயரை வேற்று மொழிக்காரன் தெரிந்து வைத்து, அதைத் தன் நூலில் குறிக்க ஏழாம் நூற்ருண்டானதென்ருல், அது தோன்றி வளர்ந்திட எத்தனை காலம் பிடித்திருக்கும்? திராவிடமாம் தமிழ்ச் சொல்லுக்கு குமரிலபட்டனைத் துணைக்கொண்டு ஏழாம் நூற்ருண்டுச் சொல் எனும் அறிவிலிகளே! இனிமேலாகிலும் உண்மை உணர்க!! பொய்மை விடுக!!!

—செல்லையா.

# மலர் மணம்

பண்டைத் 'தென்றல்' சந்தன மணமும் பல்வகை மலர் மணமும் வாரி வழங்குமாம்; இன்றையத் 'தென்றல்' (மலர்) தமிழ் மணமே பரப்பி வந்தது. இத்தனை ஆண்டுகளின் மலர்களைவிட இவ்வாண்டின் தென்றல் மலர், மணமும் குணமும் மிக்கது மட்டும் அல்லாமல், இந்த ஆண்டுக்கு 'மலர் அரசி'யாக விளங்குவது 'தென்றல்' மலர்தான்.

—மு. தங்கவேலன்,
ஆமதாபாத்.

★

"ஒன்றிலிருந்து ஒன்று, ஒன்றுக்காக ஒன்று, ஒன்ருேடு ஒன்று, ஒன்றுக்குள் ஒன்று" என்ற உயரிய தத்துவம் தனை எடுத்தியம்பிய கவிஞர் அவர்களே! தங்களின் கல்லறையைக் கண்டேன்; மனதைப் பறிகொடுத்தேன்! மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன்! நீவிர்தந்த சட்டம் நாட்டில் உள்ள நேர்மையற்றச் செயலையும் மனித சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் புண்ணையும் புலப்படுத்தியது- தங்களின் 'நான்' என்னும் தன்மை எதையும் துணிந்து கூறும் ஆற்றலை அறிவிக்கிறது. ஆனுல் என் இதயத்தைக் கவர்ந்தது கல்லறை ஒன்றுதான். அறிஞனையும் அறிவிலியையும், கவிஞனையும் கயவனையும், அரசியல் தலைவனையும் தொண்டனையும், மக்கள் தலைவனையும் மக்கள் துரோகியையும், கள்ளனையும் கபடமற்றவனையும், மோட்சத்திற்கு வழிகாட்டும் தரகனை (குருவை)யும் மோட்சத்திற்கு வழிக் கேட்கும் பக்தனையும், பணக்காரனையும் பரம ஏழையையும், முதலாளியையும் தொழிலாளியையும் ஏற்றத்தாழ்வின்றி, சாதி வேறுபாடு இன்றிஅனைவரையும் ஒருங்கே வரவேற்கும் சிறந்த பண்பினைத் தன்னகத்தே கொண்டது கல்லறை ஒன்றுதான் என்ற உயரிய தத்துவங்களை மக்கள் மன்றத்திற்குத் தரும் கவிஞரே, நீவிர் நீடுழி வாழ்க! உம் கவிதைத் தொண்டு வளர்க!! அதனுல் தென்னக மக்கள் தம் நிலையறிந்து திராவிட நாட்டு விடுதலைக்கு வழி கோலட்டும்!!!

-கருத்தைப் பறிகொடுத்தவன்,
சென்னை-3.

★

தென்றல் பொங்கல் மலர், பொங்கல் மலரில் தலையாயது எனின் மிக பொருத்தமுடைத்து; அறிஞர் அண்ணு மயிலோடு நிற்கும் காட்சியும், நாவலர் பெருந்தகை நெடுஞ்செழியன் படமும் மலரின் விலையை ஈடு செய்கின்றன எனலாம்.

கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் ஐயவினுக்கள் பகுதியை சுவைத்துக் கொண்டே இருக்க விரும்புகிறது, என் உள்ளம் நல்வழிப்பா மலருக்கு மிகவும் புகழைத்தேடித் தரும் என்பதில் ஐயமில்லை.

என் போன்ற பல திராவிடர்க்கு மகிழ்ச்சி விருந்தளித்த தென்றல் பொங்கல் மலர் ஒரு சிறந்த இலக்கியமாகும்.

அன்பன்

—மா. கந்தசாமி,
சூரப்பட்டி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணைசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு. தொலைபேசி எண் 88510.